REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 டிசம்பர் 19 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 299 | Monday 19, December, 2022 | 16 பக்கங்கள் | 50/-

பாண் உள்ளிட்ட சிறு உணவுப் பண்டங்களின் விலைகளும் குறைப்பு

சிறு உணவு பண்டங்களின் விலைகள் நேற்று 18 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் 10 ரூபாவால் குறைப்பதற்கு பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. 06

சர்வதேச உறவுகளைப் பேணும் போது

அனைத்து நாடுகளுடனும் இலங்கை நட்புறவுடன் செயற்பட வேண்டும்

தியத்தலாவை இராணுவ கல்லூரி வைபவத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

ஒரு தீவாக இலங்கை, சர்வதேச உறவுகளைப் பேணும்போது அனைத்து நாடுகளுடனும் நட்புறவுக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உலக வல்லரசுகளின் போராட்டங்களில் இலங்கை பக்கச்சார்பின்றி அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்படுவதன் மூலம் சர்வதேச உலகில் இலங்கையை நல்ல நிலைக்கு உயர்த்த முடியுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். 06

14 கப்பல் மசகு எண்ணெய் கொள்வனவு

சுபகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் அடுத்தாண்டு தொடர்ச்சியாக இயங்கும்

அமைச்சின் உயரதிகாரி தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பதினான்கு கப்பல்களில் தேவையானளவு மசகு எண்ணெய் நாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளதுடன் அடுத்த வருடத்தில் தொடர்ச்சியாக சுபகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை செயற்படுத்த தீர்மானித்துள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. அதுதொடர்பில் நேற்று அமைச்சின் உயரதிகாரியொருவர் 06

அரசியலமைப்பு பேரவை

நாட்டின் பன்முகத் தன்மையை பிரதிபலிக்க கூடியதாக அமைய வேண்டும்

தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து

அரசியலமைப்புப் பேரவையில் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களை சிபாரிசு செய்வதற்கு சிவில் சமூக அமைப்புகளுக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டுமென தேசிய சமாதானப் பேரவை, கோரிக்கை விடுத்திருக்கிறது. அத்துடன் நாட்டின் பன்முகத்தன்மையை பிரதிபலிக்கக்கூடியதாக அரசியலமைப்புப் பேரவை அமைய வேண்டுமென்றும் தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியிருக்கிறது. இது தொடர்பாக விடுத்திருக்கும் 06

தொழிலதிபர் தினேஷ் ஷாப்டர் படுகொலை

சுமார் 23 பேரிடம் வாக்குமூலம் பதிவு; குறுந்தகவல்கள், 42 CCTV கள் ஆய்வு

லோரன்ஸ் செல்வநாயகம்

பிரபல தொழிலதிபர் தினேஷ் சாப்டர் படுகொலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளோடு தொடர்புடைய 42 சிசிடிவி காட்சிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

படுகொலை விசாரணைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அவரது கையடக்க தொலைபேசி உட்பட பல கையடக்க தொலைபேசிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு குறுந்தகவல்கள் தொடர்பிலும் ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவிடம் நேற்றைய தினம் இரண்டரை மணித்தியாலங்கள் வாக்குமூலம் ஒன்றை பொலிஸார் பதிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தினேஷ் சாப்டர் வசித்துவரும் கறுவாத் தோட்டம் ப்ளவர் வீதி வீட்டுக்கு அருகாமையில் இருந்து பொரளை பொது மயானம் வரையிலான வீதிகளிலுள்ள சிசிடிவி கெமராக்கள் இவ்வாறு 06

108 சுற்றுலா பயணிகளுடன் 'ஓசன் ஓடிசி' இலங்கை வருகை

அமெரிக்க செல்வந்தர்கள் நாட்டில் பல பகுதிகளுக்கும் சுற்றுலா பயணம்

லோரன்ஸ் செல்வநாயகம்

அமெரிக்காவின் செல்வந்தர்களான 108 சுற்றுலா பயணிகளுடன் 'ஓசன் ஓடிசி' கப்பல் நேற்று நண்பகல் கொழும்பு துறைமுகத்தை 06

தெஹிவளையில் ரயிலுடன் மோதி இருவர் பலி, ஒருவர் படுகாயம் 03

ரயில் பாதையை கடந்த போது சம்பவம்

அரச நிர்வாக முடிவுகளை உரியபடி நடைமுறைப்படுத்துவது அவசியம் 03

இல்லையேல் அரச சேவையினாலேயே அரச சேவை பின்னடைவுக்குள்ளாகும்

அமைச்சர் பந்துலவின் எண்ணக்கருவுக்கமைய

தெற்கு அதிவேக பாதை இருபுறமும் கறுவா மரக் கன்றுகள் நடும் திட்டம் 03

போலிக் கடவுச் சீட்டுகளுடன் இரண்டு இலங்கை பெண்கள்

சென்னை விமான நிலையத்தில் கைது

சென்னையிலிருந்து போலி கடவுச்சீட்டுகளில், யாழ்ப்பாணம் வர முயன்ற 02 இலங்கை பெண்களை சென்னை விமான நிலையத்தில், வைத்து குடியுரிமை அதிகாரிகள் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டதையடுத்து இரண்டு பெண்களும் சென்னை குற்றப்பிரிவு பொலிஸாரிடம் மேலதிக நடவடிக்கையாகவே 06

ஜனாதிபதியினுடனான பேச்சுவார்த்தையில்

தமிழ் மக்களுக்கான நிரந்தரத்தீர்வு பற்றி தெளிவாக எடுத்துரைப்போம்

உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி கட்டமைப்பில் அதி உச்ச அதிகார பகிர்வு தரப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடு

காரைதீவில் சுமந்திரன் எம்பி தெரிவிப்பு

காரைதீவு குறூப் நிருபர்

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் 06

இலங்கைக்கான கடனை விரைவுபடுத்த சீனாவுடன் பயனுள்ள பேச்சுவார்த்தை

IMF பிரதானி ஜோர்ஜுவா தெரிவிப்பு

இலங்கைக்கான கடன் உதவியை விரைவுபடுத்துவதற்கான தேவை தொடர்பில் சீனாவுடன் பயனுள்ள பேச்சுவார்த்தையொன்றை மேற்கொள்ள முடிந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானி கிறிஸ்டலினா ஜோர்ஜுவா தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகச் சேவையொன்று தெரிவித்துள்ளது. அதேவேளை, தனியார்துறை கடன் 06

யாழ்.- காரைக்கால் வர்த்தக கப்பல் சேவை பெப்ரவரியில்

யாழ். வணிகர் கழகம் தெரிவிப்பு

காரைக்கால் மற்றும் காங்கேசன் துறைக்கான கப்பல் சேவை அடுத்த வருடம் பெப்ரவரி மாதமளவில் ஆரம்பிக்குமென யாழ். வணிகர் கழக தலைவர் ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

நேற்று (18) யாழ். வணிகர் கழகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தைப்பொங்கல் தினத்தின் பின்னர் பெப்ரவரி மாதம் ஆரம்பத்துக்குள் காரைக்கால் மற்றும் காங்கேசன்துறைக்கான கப்பல் சேவை ஆரம்பிக்குமென எதிர்பார்க்கிறோம்.

இரண்டு நிறுவனங்கள் இதை ஆரம்பிக்கின்றன. அதற்கென எம்முடனும் கலந்துரையாடல் நடத்துகின்றனர். இது 06

போதைப்பொருள் மாபியாக்களின் வலைக்குள் பாடசாலை மாணவர்கள்

பெற்றோரின் கழுகுப் பார்வை அவசியம் என்கிறார் எம்.பி.இராதாகிருஷ்ணன்

ஹற்றன் சுழற்சி நிருபர்

போதைப்பொருள் மாபியாக்களின் வலைக்குள் இன்று பாடசாலை மாணவர்களும் சிக்கி, போதைக்கு அடிமையாகிவருவது வேதனையளிக்கின்றது. இதற்கு ஆரம்பத்திலேயே முற்றுப்புள்ளி வைக்க 06

நாடு முழுவதும் இருமல், சளி நோய்

கடும் குளிரான காலநிலையுடன் வைரஸ் தொற்றுகளே காரணம்

விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம

நாடு முழுவதும் இருமல் மற்றும் சளி பரவுவதற்கு வைரஸ் மற்றும் டெங்கு போன்ற காரணங்கள் இருப்பதாக தேசிய தொற்று நோய்கள் நிறுவகத்தின் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் ஆனந்த 06

பெந்தோட்டை உல்லாச விடுதியில் முகநூல் விருந்துபசார நிகழ்வு

ஐஸ் போதைப்பொருளுடன் 30 பேர் கைது

பெந்தோட்டை போதிமால்வ பிரதேசத்திலுள்ள உல்லாச விடுதியொன்றில் முகநூல் வலையமைப்பினர் நடத்திய விருந்துபசாரத்தில் ஐஸ் போதைப்பொருளுடன்30பேர்கைது செய்யப்பட்டதாக பெந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 06

25 ஆவது கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா

இலங்கையின் 25 ஆவது கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன கடற்படை வழக்கப்படி புதிய கடற்படைத் தளபதி பிரியந்த பெரேராவிடம் கடமைகளை கையளித்தார்.

கடற்படையிலிருந்து ஓய்வு பெற்ற அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவுக்கான பிரியாவிடை வைபவம் கடற்படைத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு கடலில் 104 பேருடன் தத்தளித்த படகு கடற்படையினரால் மீட்பு

மியன்மாரிலிருந்து இந்தோனேஷியா செல்பவர்களென தகவல்

யாழ்.விசேட, யாழ். குறூப் நிருபர்கள்

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கடலில், 104 பேருடன் தத்தளித்துக் கொண்டிருந்த படகு மீட்கப்பட்டு, காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. 06

நகர்வலம்

நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல்...

கற்றல் உபகரணங்களை கூடுதல் விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை

நாடளாவிய ரீதியில் நுகர்வோர் அதிகார சபை சுற்றிவளைப்புகளை மேற்கொள்ள முடிவு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேலதிகமாக பாடசாலை பாடப்புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களைத்தேடி தற்போது அநுராதபுரம் மாவட்டத்தில் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகார சபையின் மாவட்ட அலுவலக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

விசேடமாக பாடசாலை புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளை மாற்றவேண்டாம் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள நிலையில் அதனை கேட்காமல் பாடசாலை புத்தகங்கள் உள்ளிட்ட உபகரணங்களை கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக அதிகார சபையினால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் பாடசாலை புத்தகங்கள் உள்ளிட்ட கற்றல் உபகரணங்களை நிலையான விலைக்கு மேல் நாடளாவிய ரீதியில் விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விசேடமாக பாடசாலை பாடப் புத்தகம் உள்ளிட்ட உபகரணங்களை அதிகவிலைக்கு விற்பனை செய்வதாக பெற்றோர்களினால் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் குறித்த உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மேயர் வீ.மணிவண்ணன் மொறட்டுவ மாநகர சபைக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டார். இவ்விஜயத்தின் ஞாபகார்த்தமாக மரக்கன்று ஒன்றும் நட்டி வைக்கப்பட்டபோது எடுத்த படம். இந்நிகழ்வில் யாழ். மற்றும் மொறட்டுவ மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டுள்ளதை காணலாம்.

(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்தில்;

கோழி வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்க அரசு நிதியுதவி

கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் நடவடிக்கை

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்டத்தின் மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் கோழி வளர்ப்பு திட்டத்தினை ஊக்குவிப்பதற்காக வேண்டி அரசாங்கத்தினால் ஒருகோடியே 70 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயனாநந்த தெரிவித்தார்.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 153 பயனாளிகள் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பெரியகுளம், யகாவெவ, குடாகுபுக்கொள்ளாவ, இசின்பெஸ்சகம, எகிரிகந்த, தும்ரிய நகர் உள்ளிட்ட கிராம சேவகர் பிரிவுகளிலேயே மேற்படி கோழிவளர்ப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கோழிவளர்ப்பு திட்டம் வெற்றியளித்துள்ளதாகவும் இதன் மூலம் இருபத்து எட்டாயிரத்துக்கும் (28,000/=) அதிகமான மேலதிக வருமானத்தினை மாதமொன்றுக்கு பெற்றுக்கொள்ள முடிவதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

அநுராதபுரம் மாவட்டத்தின் மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கோழி வளர்ப்புத் திட்டம் எதிர்பார்த்ததை விடவும் பாரிய முன்னேற்றத்தினை கண்டுள்ளதால் மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவின் ஏனைய கிராமசேவகர் பிரிவுகளிலும் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கோழிவளர்ப்பு திட்டத்தினை விஸ்தரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அநுராதபுர மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயனாநந்த மேலும் தெரிவித்தார்.

பிரிமடுவ பிரதேச வைத்தியசாலையில்

மருந்தாளர் இல்லாமையால் நோயாளிகள் அசௌகரியம்

திறப்பனை தினகரன் நிருபர்

திறப்பனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அமைந்துள்ள பிரிமடுவ பிரதேச வைத்திய சாலையில் சுமார் ஒரு வார காலமாக மருந்தாளர் ஒருவர் இல்லாத காரணத்தினால் வைத்திய சிகிச்சைக்காக வரும் வெளி நோயாளிகள் மற்றும் நோயாளர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் கொலஸ்ட்ரால் தொற்று நோய்களுக்கான சிகிச்சைகள் கடந்த (15) இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்ட சுமார் 150 நோயாளிகளை வைத்தியர் பரிசோதித்த போதிலும், மருந்துகளை வழங்குவதற்கு மருந்தாளர் இல்லாத காரணத்தினால் அந்த நோயாளிகள் பெரிதும் சிரமப்பட்டனர். குறிப்பாக முதியவர்கள் இதனால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியிருந்தனர்.

பின்னர், மற்றொரு மருத்துவ மனையில் இருந்து மருந்தாளர் ஒருவர் வரவழைக்கப்பட்டு, அன்றைய தினம் சுமார் 11.30 மணியளவிலேயே மருந்துகளை வழங்க மருத்துவமனை ஊழியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த சில நாட்களில், அருகில் உள்ள மருத்துவ மனையில் இருந்து மருந்தாளர் ஒருவர் வரவழைக்கப்பட்டு, வெளி நோயாளர்கள் மற்றும் மருத்துவ நோயாளிகளுக்கு மருந்து வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்தது.

பயிரிமடுவ, குட்டிக்குளம, அளுத்கம, ஊறகோட், புளியங்குளம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் நோயாளிகள் மருத்துவ சிகிச்சைக்காக இங்கு வருவதுடன் அவர்களுக்கு இந்த பிரிமடுவ பிரதேச வைத்தியசாலை பெரும் உதவியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை நாடளாவியரீதியில் நேற்று நடைபெற்றது. அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் தங்களது நிலையங்களுக்கு வருகை தந்தபோது எடுத்த படம். படங்கள்: அநுராதபுரம் தினகரன் நிருபர்

வருமானம் குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

ஏ.எஸ்.எம்.ஜாவித்

அக்ரம் பௌண்டேஷன் ஏற்பாட்டில் மூவினத்தையும் சேர்ந்த வருமானம் குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு இலவச அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மாளிகாவத்தை பிரதீபா மண்டபத்தில் (17) நடைபெற்றது.

அக்ரம் பௌண்டேசன் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளருமான எஸ். அக்ரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொழும்பு நகரத்திலுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இதன்போது பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அதிதியாக கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் எம்.ரீ.எம்.இக்பால் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

அவர் அங்கு உரையாற்றுகையில்; இன்றைய நிலையில் வருமானம் குறைந்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு இவ்வாறான உதவிகள் மிகவும் பயனுள்ளதாக இருப்பதுடன் இன்று மாணவர்களிடத்திலும் பாடசாலைகளிலும் போதைவஸ்துப் பாவனையும் விற்பனையும் அதிகரித்துள்ளதால் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும். பாடசாலைகளில் போதைவஸ்து பாவனை இருப்பது பாடசாலையின் நன்மதிப்புக்கு கலங்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த விடயத்தில் அனைவரும் மிகவும் அவதானத்துடனும் கண்காணிப்புடனும் இருக்க வேண்டும் என்றார்.

பேருவளை கெச்சிமலை தர்ஹாவில் புனித புஹாரி மஜ்லிஸ் தமாம்

பேருவளை விசேட நிருபர்

வரலாற்று பிரசித்தி பெற்ற பேருவளை கெச்சிமலை தர்ஹாவில் நடைபெற்று வரும் வருடாந்த புனித ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹுல் முஸ்லிம் மஜ்லிஸின் தமாம் வைபவம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை மற்றும் வக்பு சபை ஆகியவற்றின் உறுப்பினர் சங்கைக்குறிய மௌலவி ஸக்கி அஹமத் (அஷ்ரபி) பின் அஷ்ஷெய்க் முஹம்மத் காலிப் அலவி ஆலிம் அலவியதுல் காதிரி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் மார்க்க அறிஞர்கள், உலமாக்கள், முரீதீன்களும் பங்குபற்றுவர்.

கடந்த நவம்பர் 21 ஆம் திகதி மேற்படி மஜ்லிஸ் ஆரம்பமானது. வெள்ளிக்கிழமை தவிர ஏனைய நாட்களில் ஹதீஸ் பாராயணம் மற்றும் மார்க்கச் சொற்பொழிவுகள் இடம்பெற்றதோடு எதிர்வரும் 24 ஆம் திகதி இரவு கத்தாத் ராதிப், விஷேட மார்க்கச் சொற்பொழிவு அதனையடுத்து தர்காவில் அடங்கப்பட்டுள்ள அஷ் ஷெய்க் அஷ்ரப் வலியுல்லாஹ் ஸியாரத் நிகழ்ச்சியும் இடம்பெற்று 25 ஆம் திகதி அதிகாலை அல் குர்ஆன் தமாம் மஜ்லிஸும் இடம்பெறும்.

தமாம் நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி முஸ்லிம் சேவை 71 ஆவது வருடமாகவும் நேரடியாக அஞ்சலி செய்யவுள்ளது.

தமாம் வைபவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீள், பேருவளை நகர பிதா மஸாஹிம் முஹம்மத் உட்பட அரசியல்வாதிகள், பிரமுகர்கள், தரீக்காக்களின் இஹ்வான்கள், நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம் சகோதரர்கள் கலந்து கொள்வர்.

24 ஆம் 25 ஆம் திகதிகளில் தர்காவுக்கு பெண்கள் வருவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. பெரிய கந்தூரி தமாம் நிகழ்வில் பங்குபற்றும் மக்களின் பாதுகாப்புக் கருதி பேருவளை பொலிஸார் விசேட பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுவர்.

மகீஸா நிறுவன ஏற்பாட்டில் இரு நூல்கள் வெளியீடு

களுத்துறை மகீஸா நிறுவனமும் தமிழ் மொழி ஆசிரியருமான சிராப் கஸ்ஸாலி உடன் இணைந்து தரம் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மாணவிகள் முறையே 'அழகின் அழகு' எனும் கவிதை நூலையும் 'இலக்கணப் பூங்கா' எனும் இலக்கண வினா நூலையும் வெளியிடும் நிகழ்வு இம்மாதம் 29ம் திகதி பாணந்துறை தொட்டவத்தையில் அமைந்துள்ள மகீஸா கட்டட வளாகத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் (வலயம்) கலைமதி யாஸின் கலந்து சிறப்பிப்பார். இந்நிகழ்வில் இலக்கியவாதிகளான முன்னாள் அதிபர் கலாபூஷணம் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், திக்குவல்லை கமால், கலைமகன் பைரூஸ், கவிதாயினி லைலா அக்ஷியா ஆகியோர் கலந்து கொள்வதோடு அருகிலுள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் இன்னும் பல பிரமுகர்களும் கலந்து கொள்வர்.

களுத்துறை மாவட்ட விளையாட்டுத்துறை ஊக்குவிப்பு;

பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயம் உதவி

ருஸைக் பாரூக்

பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் Tareq Md Ariful Islam அவர்களை இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் அண்மையில் சந்தித்து உரையாடினார்.

இதன்விளைவாக அவரின் வேண்டுகோளுக்கு இணங்க களுத்துறை மாவட்டத்தில் விளையாட்டுத்துறைக்கு ஊக்குவிப்பு வழங்க பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயம் முன்வந்துள்ளது.

மேற்படி மாவட்டத்தில் பாடசாலை மட்ட கிரிக்கெட் விளையாட்டினை ஊக்குவிக்கும் முகமாக இரண்டு பாடசாலைகளுக்கிடையில் கிரிக்கெட் போட்டி ஒன்றினை ஏற்பாடு செய்வதற்கும் உயர்ஸ்தானிகராலயம் ஒழுங்கு செய்துள்ளது.

அதன் அடிப்படையில் பேருவளை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை மற்றும் பயாகல பண்டாரநாயக்க மத்திய கல்லூரி ஆகியவற்றுக்கு இடையில் சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி இடம்பெறவுள்ளது.

இந்த திட்டத்திற்கு பங்களாதேஷ் உயர் ஸ்தானிகராலயம் நிதியுதவி வழங்கியுள்ளது.

இச்செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக இரு அணிகளையும் அறிமுகப்படுத்தும் நிகழ்வு எதிர்வரும் 21 ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் நடைபெறவுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 டிசம்பர் 19 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

10 முதல் 13 வரை

சுபஹ்	05.04
லுஹர்	12.22
அஸர்	03.38
மஃரிப்	06.22
இஷா	07.32

இன்றைய சுபதினம் 3

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

நாடளாவிய போதைப்பொருள் சுற்றிவளைப்பு

90,000 சந்தேக நபர்கள் இவ்வருடத்தில் கைது

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இந்த வருடத்தின் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டுள்ள போதைப்பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 90,000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அவர்களிடமிருந்து பெருந்தொகை ஹெரோயின், ஐஸ் உள்ளிட்ட பல்வேறு போதைப்பொருட்களை கைப்பற்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் மூலம் 108,852 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தவகையில், 06

அரச நிர்வாக முடிவுகளை உரியபடி நடைமுறைப்படுத்துவது அவசியம்

இல்லையேல் அரச சேவையினாலேயே அரச சேவை பின்னடைவுக்குள்ளாகும்

- பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

அரசாங்கத்தின் நிர்வாக முடிவுகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், அரச சேவையினாலேயே அரச சேவை பின்னடையும் நிலை ஏற்படுமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

கேகாலை நகர சபையில் (17) நடைபெற்ற 'தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்ட கேகாலை மாவட்ட மீளாய்வுக் கூட்டத்தில்' கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாம் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு மக்கள் பங்களிப்புடன் கூடிய வேலைத்திட்டம் தேவை. நாட்டை உணவில் தன்னிறைவடைந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் மாற்றுவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்கிறது. பயிரிடுவதற்குள்ள தடைகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எல்.ஆர்.சி. காணிகள் விவசாயத்திற்காக வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுள்ளது. காணிச் சீர்திருத்தச் சட்டத்தினால் விவசாயிகள் இழந்த பல பகுதிகள் உற்பத்தி நடவடிக்கைகளில் பங்கு பெறச்செய்வதற்கான வாயில்கள் திறக்கப்பட்டன. சட்டத்தின் நோக்கங்கள் அல்லது தற்போதைய உணவுப் பாதுகாப்பை அடையும் இலக்கை நோக்கிச் செல்ல வேண்டுமானால், நாம் மக்களுடன் சேர்ந்து பயணிக்க வேண்டும்.

நாம் பாரிய அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளோம். வெளிநாடுகளுக்கு செல்லும் அந்நியச் செலாவணியைக் குறைக்க வேண்டியது அவசியம். எந்தவொன்றையும் விதைத்து அறுவடைசெய்யக்கூடிய வளமான மண் நம்மிடம் இருப்பதால், உணவு உற்பத்தி என்ற இலக்கை அடையலாம்.

விவசாயத்தின் மூலம் உணவு 06

கட்டுநாயக்க விமான நிலையத்தில்

இரண்டு ஈரானியர்கள் நாடு கடத்தல்

போலி கடவுச்சீட்டில் இலங்கை வந்தவர்களென்ற தகவல் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இரண்டு வெளிநாட்டு பிரஜைகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். ஈரான் நாட்டை சேர்ந்த இருவரே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர். போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்கு வந்து, சுவீடனின் ஸ்டொக்ஹோமுக்கு செல்ல முயற்சித்தமையினால் இவர்கள் நாடு 06

தேர்தல் மூலம் நாட்டின் பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் மூலம் நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாதென நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த நேரத்தில் தேர்தல் கேட்கப்படுவதன் காரணம் அரசியல் தேவையைத் தவிர உண்மையான தேர்தலின் தேவை ஒன்றல்ல.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட தேர்தல் நடத்தப்பட வேண்டுமென அமைச்சர் தெரிவித்துள்ளார். எந்த நேரத்திலும் தேர்தலை சந்திக்க அரசு தயாராக உள்ளது என்றார்.

புதிய கூட்டணியுடன் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும், அதற்காக ஏற்கனவே 08 கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும், விரைவில் சின்னம் குறித்து முடிவு செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கம்பஹா, உடுகம்பொல பிரதேசத்தில் (17) நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

கொரோனா தொற்று காரணமாக உள்ளூராட்சித் தேர்தலை ஓராண்டுக்கு ஒத்திவைக்கும் நிலை அரசுக்கு ஏற்பட்டது. தேர்தல் தள்ளிப்போகும் என்று நாங்கள் யாரும் கூறவில்லை. ஆனால், எதிர்க்கட்சிகள் அப்படியொரு சித்தாந்தத்தை நாட்டில் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றன.

கடந்த காலங்களிலே நடந்த விடயங்கள் திருத்தப்படுவது தாமதமானால் பழைய முறையிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என தனிப்பட்ட முறையில் நான் நம்புகிறேன். ஐ.தே.க, ஸ்ரீலங்கா கட்சி, மொட்டுக் கட்சி ஜே.வி.பியில் இருந்து பிரிந்து சென்றவர்கள் அனைவரும் ஒரே கொள்கைக்கு வந்திருப்பது இந்த தருணத்தில் 06

அமைச்சர் பந்துலவின் எண்ணக்கருவுக்கமைய

தெற்கு அதிவேக பாதை இருபுறமும் கறுவா மரக் கன்றுகள் நடும் திட்டம்

தெற்கு அதிவேகப் பாதையின் இருபுறமும் கறுவா மரக்கன்றுகளை நடும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு பெலியத்தை உள்ளக நுழைவாயிலை அண்டிய இடங்களில் ஆரம்பமானது. போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவின் எண்ணக்கருவுக்கமைய இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவின் வேண்டுகோளுக்கு அமைய இத்திட்டத்துக்குரிய அனைத்து கறுவா 06

தெஹிவளையில் ரயிலுடன் மோதி இருவர் பலி, ஒருவர் படுகாயம்

ரயில் பாதையை கடந்த போது சம்பவம்

தெஹிவளை ரயில் நிலையத்தில் இரண்டு இளைஞர்களும் யுவதியொருவரும் ரயிலில் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்தனர். கரந்தெனிய பகுதியைச் சேர்ந்த ரொஷான் ரந்திக விஜேசிங்க, வயது (22) மற்றும் அம்பலாங்கொடை வடுமுல்லவைச் சேர்ந்த சமந்தியா வாசம், தெரினி லக்மி (22) ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

பலப்பிட்டி தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் 12 பேர் தெஹிவளை மிருகக்காட்சிசாலையை பார்வையிட ரயிலில் வந்து தெஹிவளை ரயில் நிலையத்தில் இறங்கியதாகவும், இவர்களில் மூவர் மேம்பாலத்தை பயன்படுத்தாமல் ரயில் மேடையிலிருந்து இறங்கி ரயில் பாதையைக் கடந்து பஸ்ஸில் ஏற முயன்ற போதே இவ் விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மருதானையிலிருந்து தெற்கு களுத்துறை நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு ஒருவர் காயமடைந்துள்ளதுடன் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் சிறுவர்களுக்கு ஊட்டச்சத்து உணவு வழங்கல்

ஏ.எஸ்.எம்.ஜாவித்

ஜனாதிபதி செயலணியின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கு ஊட்டச்சத்து உணவு வழங்கப்பட வேண்டும் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டின் பல பாகங்களிலும் சிறுவர்களுக்கு பிஸ்கட் மற்றும் சிப்ஸ் பக்கற்கள் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதனடிப்படையில், கொழும்பிலும் நாட்டின் பல இடங்களிலும் சிறுவர்களுக்கு ஊட்டச்சத்து உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. கொழும்பு சென்றல் வீதியில் அமைந்துள்ள மஹ்றூப் சிறுவர் பூங்காவில் நேற்று இடம்பெற்ற வைபவத்தில் முன்னாள் அமைச்சர் சாகல ரத்னாயக்க கலந்து கொண்டு சிறார்களுக்கு பிஸ்கட் உள்ளிட்ட பொருட்களை வழங்கி வைத்தார். நிகழ்வில் கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் எம்.ரி. இக்பாலும் கலந்து கொண்டார்.

இலங்கையின் எதிர்கால மீன்பிடித்துறை முன்னேற்றம் தொடர்பில் சந்திப்பு

இலங்கையின் கடற்பிராந்தியத்தில் பிரதான அண்டை நாடாக செயற்படும் இந்தியா, இலங்கையின் எதிர்கால மீன்பிடித்துறை முன்னேற்றத்திற்கு எவ்வாறு பங்களிப்பது என்பது தொடர்பான இருதரப்பு ஒப்பந்தம் மற்றும் கொள்கையொன்றை தயாரிப்பதற்கான ஆரம்ப கலந்துரையாடல் மீன்பிடித்துறை இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த மற்றும் இந்தியாவின் இலங்கைக்கான பிரதி உயர்ஸ்தானிகர் வெங்கடேஸ்வரன் ஆகியோருக்குமிடையே கடந்த 06

பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாத ஒரு இலட்சம் ஏக்கர் காணிகள் அடுத்தவருடத்தில் அரசுக்கு சுவீகரிக்கப்படும்

அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாத அனைத்து வயல் நிலங்களையும் அரசாங்கத்திற்கு சுவீகரித்துக்கொள்ள தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் அவ்வாறு பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாத ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ஏக்கர் வயல் நிலங்கள் காணப்படுவதாகவும் அடுத்த வருடத்தில் அந்த வயல் நிலங்கள் அனைத்தையும் அரசாங்கத்திற்கு சுவீகரிக்க நடவடிக்கையெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளை இனங்கண்டு அனைத்து காணிகளிலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அந்தவகையில் வயல் நிலங்களை ஐந்து வருடங்களுக்கு அரசாங்கத்திற்கு சுவீகரித்து அவற்றில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு காணி இல்லாத இளைய சமூகத்தினருக்கு ஐந்து வருடங்களுக்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளஅந்தக்காணிகளை வழங்குவதற்கும் நடவடிக்கையெடுக்கப்படும் என்றும் அதற்கு ஏதுவாக கமத்தொழில் சட்டத்தில் விரைவாக திருத்தங்களை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளில் அடுத்தவருடத்தில் உரிய காணி உரிமையாளர்கள் பயிர்ச்செய்கையை 06

தெற்கு ஆழ்கடலில் படகுகளுடன் சிக்கிய 128Kg ஐஸ், 106Kg ஹெரோயின் கொழும்பு துறைமுகத்தில்

லோரன்ஸ் செல்வநாயகம்

தெற்கு ஆழ்கடலில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ள 4,586 மில்லியன் ரூபாவுக்கு அதிகமான பெறுமதியுடைய போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் அனைவரையும் கொழும்பு துறைமுகத்துக்கு கொண்டுவந்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினர், அரசாங்க புலனாய்வு சேவை பிரிவு அதிகாரிகள் மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் இணைந்து சில தினங்களுக்கு முன் தெற்கில் தேவேந்திரமுனைக்கு அப்பால் 229 கடல்மைல் தூரத்தில் ஆழ்கடலில் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது 4,586 மில்லியன் பெறுமதியான ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அதன்போது ஆழ்கடல் மீன்பிடிப் படகுடன் சந்தேகநபர்கள் 08 பேரை கடற்படையினர் கைதுசெய்திருந்தனர். அத்துடன் அந்த ஆழ்கடல் மீன்பிடிப் படகுக்கு எரிபொருளை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட மேலும் ஒரு படகையும் அதிலிருந்த ஆறு பேரையும் கடந்த 14 ஆம் திகதி கடற்படையினர் கைது செய்திருந்தனர். அந்த இரண்டு ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளுடன் சந்தேக நபர்களும் நேற்றைய தினம் கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டதாகவும் அந்த போதைப்பொருளை பரிசோதனை செய்வதற்காக அதன்போது கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா அங்கு சமுகமளித்திருந்ததாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

இதன்போது கைப்பற்றப்பட்டுள்ள போதைப்பொருளுடன் இந்த வருடத்தில் இலங்கை கடற்படையினர் மேற்கொண்டுள்ள போதைப்பொருள் சுற்றிவளைப்புகளின் மூலம் 28.05 பில்லியன் பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அவர்கள் தொடர்பில் நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டம் பிரயோகிக்கப்படும் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	238.54	249.41
கனடியன் டொலர்	256.80	267.07
யூரோ	340.83	352.42
ஜப்பான் யென்	2.5659	2.6696
சிங்கப்பூர் டொலர்	239.52	248.06
ஸ்டேலிங் பவுன்ஸ்	423.68	438.67
சுவிஸ் பிராங்க்	344.01	357.45
அமெரிக்க டொலர்	322.72	334.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	831.93	கட்டார் ரியால்	85.92
குவைத் டினார்	1,028.76	சவூதி ரியால்	83.64
ஓமான் ரியால்	814.75	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	85.39

தினகரன்

THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

குறள் தரும் சிந்தனை

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை உள்ளினும் உள்ளஞ் சுடும்

ஒருவர் கொலைக்கு ஆளாகும் போது கூட, தனக்குக் கேடு வந்த நேரம் கைவிட்டு ஒதுங்கி ஓடிவிட்ட நண்பர்களை நினைத்து விட்டால் அந்த நினைப்பு அவரது நெஞ்சத்தைச் சுட்டுப் பொசுக்கும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆக்கபூர்வமான முயற்சிகள்

இலங்கையானது இந்து சமுத்திரத்தில் அமைந்திருக்கும் தீவுகளில் ஒன்றாகும். நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் தேவையான அனைத்து இயற்கை வளங்களும் இங்கு நிறையவே காணப்படுகின்றன. இருந்த போதிலும் இந்நாடு வளர்முக நாடாகவே இருந்து வருகிறது.

பல்லின மக்கள் வாழும் இந்நாடு இவ்வாறு பின்னடைவுக்கு உள்ளாகி இருப்பதற்கு சுதந்திரத்துக்கு பின்னர் வந்த சில அரசியல் தலைவர்கள் முன்னெடுத்த தவறான கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களின் விளைவாக உருவான இனப்பிரச்சினையும் முக்கிய பங்கு வகித்திருக்கிறது. தற்போது நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியிலும் இப்பிரச்சினை செல்வாக்கு செலுத்தியுள்ளது.

ஆனால் இத்தேசத்தை இங்கு வாழும் எல்லா மக்களும் ஒன்றுபட்டு கட்டியெழுப்ப வேண்டிய கடப்பாட்டை கொண்டவர்களாக உள்ளனர். இருந்த போதிலும் நாட்டில் நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டிய தேவை பரவலாக உணரப்பட்டுள்ளது. தற்போதைய சூழலில் அது ஒரு முக்கியமான விடயமும் கூட.

அந்த வகையில் சமூகம், அரசியல் தொடர்பில் பரந்த அனுபவத்தையும் ஆழமான அறிவையும் கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வு காண்பதில் உறுதியாக உள்ளார். இனங்களுக்கிடையிலான தேசியப் பிரச்சினை குறித்து நீண்ட காலமாக அவர் கரிசனையுடன் செயற்படக் கூடியவராக இருக்கின்றார். இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கில், அவர் பல தசாப்த காலமாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். குறிப்பாக பிரதமராகப் பதவி வகித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர், இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக் கூடியவராகவே இருந்து வந்துள்ளார்.

அந்த வகையில் 75 ஆவது சுதந்திரதின விழாவுக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வு காண்பதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கான கலந்துரையாடலுக்கு வருமாறு அனைத்து கட்சிகளுக்கும் அவர், கடந்த மாத இறுதியில் பாராளுமன்றத்தில் அழைப்பு விடுத்திருந்தார்.

அந்த அழைப்பின் அடிப்படையில் கடந்த வாரம், ஜனாதிபதி செயலகத்தில் சர்வகட்சி பேச்சுவார்த்தை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. 'இப்பேச்சுவார்த்தையில் அரசியல் கைதிகளின் விடுதலை, காணி அபகரிப்பு மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் விடயங்கள் போன்ற மூன்று முக்கிய விடயங்களுக்கும் எதிர்வரும் 2023.04.04 ஆம் திகதிக்குள் தீர்வு காண இணக்கம் காணப்பட்டுள்ளது' என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான பாராளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரன் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, 'இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் எதிர்வரும் ஜனவரி முதல் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுப்பட உள்ளன. இதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தயாராகியுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வைக் காணும் நோக்கில் ஜனாதிபதி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள போதிலும், சிலர் அவரது முயற்சிகளையும் விமர்சனக் கண்கொண்டு பார்க்கக் கூடியவர்களாக உள்ளனர். 'இது ஜனாதிபதிக்கு ஆதரவு திரட்டும் முயற்சி என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான முன்னெடுப்பு என்றும் கூறுபவர்களும் இருக்கவே செய்கின்றனர். ஆனால் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முன்னெடுப்புகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்கள் தொடர்பாக பிரத்தியேகமான சந்திப்புக்களும் பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படுகின்றன' என்றும் வெளிவிவகார அமைச்சர் கூறி இருக்கின்றார்.

இந்த அழகிய தேசம் கட்டியெழுப்பப்பட வேண்டும். தொடர்ந்தும் வளர்முக நாடாக இருக்க முடியாது. இதன் நிமித்தம் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இதற்காக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவது அவசியம். அதுவே நாட்டை உண்மையாக நேசிக்கும் ஒவ்வொரு பிரஜையினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

இப்பின்னணியில் ஜனாதிபதி, இப்பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வைக் காண்பதில் உறுதியான முயற்சிகளை முன்னெடுத்திருக்கிறார். இம்முயற்சிகளை ஆக்கபூர்வமாகப் பார்க்க வேண்டுமேயொழிய, அதனை விமர்சிப்பதாலோ தவறான கண்கொண்டு நோக்குவதாலோ நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மைகள் கிடைக்கப் போவதில்லை. இதனை ஒவ்வொருவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆகவே நாட்டில் நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி முன்னெடுத்துவரும் முயற்சிகளுக்கு கட்சி பேறுபாடுகளுக்கு அப்பால் சகலரும் ஆதரவும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அது வளமான தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான பங்களிப்பாக அமையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

மகத்துவம் மிகுந்த மார்கழி மாதம்

முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னரெல்லாம் மார்கழி மாதம் என்றால் அதிகாலை வீதியே களைகட்டியிருக்கும். மேற்கத்தேய கலாசாரம் நமக்குள் ஊடுருவி விட்டது. முக்கியத்துவம் நிறைந்த விஷயங்கள் நமது நேரத்தை ஆக்கிரமித்தன. வாழ்க்கையில் எந்த விதத்திலும் நமக்கு பயன் தராத விஷயங்களுக்கு நாம் அதிமுக்கியத்துவம் கொடுத்து அதில் நேரத்தை வீணடித்து அதை பெருமையாக கருதும் ஒரு காலத்தில் இன்று வாழ்ந்து வருகிறோம்.

மார்கழி மாதம் கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிறந்தது. இது மனிதனை உயர் வழிக்கு அழைத்துச் செல்லும் மாதமாகும். மார்கழி என்பது எண்ணற்ற மகத்துவங்கள் நிறைந்த ஒரு அற்புதமான மாதமாகும். கிருஷ்ண பரமாத்மா கீதையில் 'மாதங்களில் நான் மார்கழியாவேன்' என்று கூறுகின்றானென்றால் மார்கழியின் சிறப்பை யூகித்துக் கொள்ளலாம்.

அதே நேரம் சினிமா பாடல்களில் கூட, மார்கழிப் பாட்டு பாடவா...., மாதங்களில் அவள் மார்கழி என்றெல்லாம் உள்ளன. அப்படி என்றால் அதை ஏன் பீடை மாதம் என்கிறார்கள் என்று சிலர் கேட்கக்கூடும். அது பீடை மாதம் அல்ல, பீடுடைய மாதம் (அதாவது செல்வம் மிகுந்த மாதம்) என்பதுதான் மருவி நாளடைவில் பீடை மாதம் என்றாகி விட்டது.

நம் சம்பிரதாயப்படி குறிப்பிட்ட ஆடி, புரட்டாசி, மார்கழி மாதங்களில் திருமணம் உள்ளிட்ட சுபநிகழ்ச்சிகள் நடத்துவதில்லை. காரணம் இவை முழுக்க முழுக்க இறை வழிபாட்டுக்கு என்றே ஒதுக்கப்பட வேண்டிய மாதங்கள். அதிலும் மார்கழி மகத்துவம் நிறைந்தது. எனவே நம் வாழ்வை அர்த்த முள்ளதாக்கிக் கொள்ள வேண்டுமானால், இம் மாதத்தில் சரணாகதி என்னும் உயர் தத்துவத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

மார்கழி மாதம் விரதம் இருந்து விஷ்ணுவை வழிபட்டால் தோஷங்கள் நீங்கி செல்வச் செழிப்பைப் பெறுவர். திருமணத்தடை நீங்கும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். தொழிலில் நஷ்டம் நீங்கி இலாபம் பெருகும்.

மார்கழி மாதங்களில் வீட்டுக்கு முன்பு கோலமிட்டால் மகாலட்சுமி வீடு தேடி வருவார் என்பது நம்பிக்கை. இதனால் பெரும்பாலானோர் மார்கழியில் கோலமிடுகின்றனர்.

மார்கழி மாதக் காற்று தோலுக்கும் , வெள்ளை சிவப்பு உயிர் அணுக்களுக்கும், புற்றுநோய்களுக்கும், உடல் நலத்திற்கும் மிகவும் நல்லது. இது விஞ்ஞான பூர்வமான அறிவியல் உண்மை. மனமும் தூய்மையாகும்.

கோலமும், பாடலும் மனதை ஒருமைப்படுத்தி உணர்வுகளைச் செம்மைப்படுத்தும். கோலத்திற்கு அரிசி மாசு பொடி பயன்படுத்துவது நல்லது. சாதாரண கோலப் பொடிகளை பயன்படுத்தக் கூடாது.

நிறைய தொலைத்து விட்டோம், இதையாவது இழக்காமல் அனுபவிப்போமே.

கலைஞர் க.மகாதேவன்
உடப்பு

சமய, சமூக பணிகளில் அயராது உழைக்கும் பாண்டிருப்பு நாவலர் அறநெறி பாடசாலை

33 ஆவது ஆண்டு நிறைவில் காலடி

கல்முனை, பாண்டிருப்பில் நாவலர் அறநெறிப் பாடசாலை சிறப்பாக இயங்கி வருகிறது. அம்பாறை மாவட்டத்தில் எத்தகைய இடர்களைச் சந்தித்தாலும் அவற்றையெல்லாம் முறியடித்து 33 ஆவது ஆண்டு விழாவை நோக்கி இந்த அறநெறிப் பாடசாலை வீறுநடை போடுகின்றது.

சைவத்துக்கும் தமிழுக்கும் அரும் பணியாற்றிய ஸ்ரீலஸ்ரீ அறுமுகநாவலர் பெருமானின் திருநாமத்தில் இயங்கி வரும் பாண்டிருப்பு நாவலர் அறநெறிப் பாடசாலை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் 1990. 06. 17 ஆம் திகதி உருவாக்கப்பட்டது.

இந்து சமயத்தினதும் இந்துப் பெருமக்களினதும் நலன் கருதியும். நாளைய சிறார்களின் நல்வாழ்வு கருதியும் இந்து சமயக் கருத்துகளை பிஞ்சு உள்ளங்களில் பதியவைக்க வேண்டும் என்ற அடிப்படையை குறியாகக் கொண்டு பாண்டிருப்பு இந்து இளைஞர் மன்றம் இந்த அறநெறிப் பாடசாலையை தோற்றுவித்தது. அன்று தொட்டு இன்றுவரை பாண்டிருப்பு இந்து இளைஞர் மன்றம் சிறப்பாக இயங்கி வருகிறது.

பாண்டிருப்பு இந்து இளைஞர் மன்றத்தின் அன்றைய தலைவரும் தற்சமயம் கனடாவில் வசித்து வருபவருமான முன்னாள் பொது சுகாதாரப் பரிசோதகர். நோ. விஜயரெத்தினம், ஓய்வுநிலை அதிபர் நல்லையா கமலநாதன் ஆகியோரின் பங்களிப்பினால் இந்த அறநெறிப் பாடசாலை உருவாக்கப்பட்டது.

இந்த அறநெறிப் பாடசாலைக்கு அதிபராக காலஞ்சென்ற தபாலதிபர் கவிஞர் முத்தமிழ் திலகம் வ.ஞானமாணிக்கம் (அக்கரை மாணிக்கம்) நியமிக்கப்பட்டிருந்தார். கல்வி, சமய சமூக கலை கலாசார பணிகளில் பங்களித்து வந்த அந்தப் பெருமகன் 'அறநெறிப் பாடசாலை எங்கள் உயிர்' என்ற அடிப்படையில் அவரது அன்புக்குப் பாத்திரமான அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் அர்ப்பணிப்பான சேவையாற்றியிருந்தார்.

அக்கரை மாணிக்கம் ஐயாவின் வெற்றிடத்தை நிரப்பும் பொறுப்பினை கல்முனை கல்வி வலய இந்து சமய பாட ஆசிரிய ஆலோசகர் மா.லக்குணம் ஏற்று சிறப்பாக செயற்பட்டு வருகின்றார்.

நாவலர் அறநெறிப் பாடசாலை இந்துப் பண்பாட்டு விழுமியப் பண்புகளையும் கல்வியையும் கலைகளையும் வளர்த்து வருகின்மை போற்றுதலுக்குரிய விடயமாகும். இங்கு நாயன்மார்களின் குருபூசை தினங்கள், இந்து சமயப் பெரியார்களின் ஜனன தின நிகழ்வுகள், சிரார்த்த தின நிகழ்வுகள், சமயவிழாக்கள், சமுதாய மட்டத்தில் சிறந்து விளங்கும் பெரியோரை கௌரவித்தல் உள்ளிட்ட பல வைபவங்கள் நடைபெற்று வருகின்றன.

பாண்டிருப்பு நாவலர் அறநெறிப் பாடசாலையின் வளர்ச்சிக்காக அன்றும் இன்றும் இந்து சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர்களாக பதவி வகித்தவர்கள் பெரும் பங்களித்துள்ளனர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் க.பத்மநாதன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மு. இராஜேஸ்வரன், கவிதாயினி டொக்டர் புஷ்பலதா லோகநாதன், தொழிலதிபர் க.லதன் ஆகியோர் அமரர் அக்கரை மாணிக்கம் ஐயா அதிபராகவிருந்த காலத்தில் உதவும் கரங்களாக இருந்தனர்.

தற்சமயம் பாடசாலை மற்றும் பல் கலைக்கழக மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. விரும்பத்தகாத செயலில் மாணவ சமுதாயம் அள்ளுண்டு செல்லும் அபாயகரமான சூழல் உருவாகியுள்ளது.

இதற்கு பிரதான காரணங்களில் ஒன்று அறநெறிக் கல்விப் போதனைகள் முறையாக இடம்பெறாமையாகும். அறநெறிக் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பது இன்றைய காலத்தின் தேவையாகும்.

இந்த வகையில் சமூகத்திற்கு ஒரு முன்மாதிரியாக விளங்கும் பாண்டிருப்பு நாவலர் அறநெறிப் பாடசாலையின் வளர்ச்சியில் பங்கு கொண்ட யாவருக்கும் நன்றி கூறுவது பொருத்தமாகும்.

செல்லையா பேரின்பராசா
(துறைநீலாவணை நிருபர்)

அட்டாளைச்சேனையில் போதைவஸ்து எதிர்ப்பு விழிப்புணர்வு நடைபவனி

போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனியும், அறபா வித்தியாலய மாணவர்களுக்கான கருத்தரங்கும் அண்மையில் அட்டாளைச்சேனையில் பெருமளவானோரின் பங்களிப்புடன் இடம்பெற்றன.

'நாம் ஊடகர் பேரவை'யின் (we Journalists forum) ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளுக்கு அட்டாளைச்சேனை ஜம்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் வை.எம்.எம்.ஏ அமைப்பின் அட்டாளைச்சேனை கிளையினர் அனுசரணை வழங்கினர்.

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமான போதைப் பொருளுக்கு எதிரான நடைபவனி, சந்தைச் சதுக்கத்தைச் சென்றடைந்து, மீண்டும் அறபா வித்தியாலயத்தை வந்தடைந்தது.

அதனையடுத்து அறபா வித்தியாலயத்தில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கான இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம். றஸாட் வளவாளராக பங்கேற்றார்.

'நாம் ஊடகர் பேரவை'யின் (we Journalists forum) தலைவர் யூ.எல். மப்றூக் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்சில், பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். உவைஸ், அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ். ஜுனைதீன் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

மேலும், வை.எம்.எம்.ஏ அமைப்பின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.ஐ.எம். றியாஸ், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் உபதலைவர் எஸ். தஸ்தகீர், செயற்திட்ட தவிசாளர் கே.எல். சுபையிர், மேற்படி அமைப்பின் அட்டாளைச்சேனை கிளையின் தலைவர் எம்.ஐ. ஹாசிம், செயலாளர் ஏ.எல். கியாஸ்தீன், அறபா வித்தியாலய அதிபர் எம்.ஏ. அன்சார், நாம் ஊடகர் பேரவையின் செயலாளர் ஏ.சி. றிசாட், பொருளாளர் ஏ. புஹாது, உப தலைவர் ஏ.பி. அப்துல் கபூர், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.ஏ. வாஹிட் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

றிசாத் ஏ. காதர்
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

பொத்துவில் மண்ணுக்கு பெருமை சேர்த்த பொறியியலாளர் எம்.எஸ்.எம்.முஸ்தாலி

பொத்துவிலில் பிறந்து சாய்ந்தமருதில் திருமணபந்தத்தில் இணைந்த பொறியலாளர் எம்.எஸ்.எம். முஸ்தாலி (B.Sc. Engineer), இலங்கை பொறியலாளர் நிறுவனத்தால் (Institution of Engineers, Sri Lanka) தவிசாளராகவும் மற்றும் சபை உறுப்பினராகவும் (Council Member) 2022 இல் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை பொறியலாளர் நிறுவனத்தாலும் லண்டன் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனத்தாலும் Chartered Engineer and International professional Engineer ஆகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது மொபிடல் தொலைத்தொடர்பு நிறுவனத்தின் தகவல் மத்திய நிலையத்தில் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் 15 வருடத்திற்கு மேலான அனுபவத்துடன் சிரேஷ்ட முகாமையாளராக கடமை புரிகிறார்.

எம்.எஸ்.எம்.முஸ்தாலி, கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் பிரதேசத்தை பிறப்பிடமாக் கொண்ட தென்கிழக்கின் முதலாவது பொறியலாளரும், C.Eng., MIE(Sri Lanka), MICE(London), நீர்ப்பாசன திணைக்கள பிரதிப் பணிப்பாளரும், ஊவா மாகாண பொறியலாளர் சேவைகள் பிரதிச் செயலாளரும், தென்கிழக்கு கரையோர ஆசிய அபிவிருத்தி வங்கியின் வீதி கட்டுமான செயல்திட்ட பொறியியல் ஆலோசகருமாக கடமையாற்றிய காலஞ்சென்ற கே.ஆர்.எம்.சஹீட் அவர்களின் புதல்வராவார்.

இவர் பொத்துவில் மத்திய கல்லூரியில் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து கொழும்பு றோயல் கல்லூரியில் இடைநிலையிலும் உயர்தேரத்திலும் கற்று மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் பட்டம் முடித்தவர். தற்போது LLB பட்டமும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

ஒப்சேர்வர்-மொபிடெல் பாடசாலை கிரிக்கெட் விருது வழங்கல் விழா 2022

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன ஆண்டின் சிறந்த பாடசாலை அணியான கொழும்பு சென். ஜோசப் கல்லூரிக்கு கிண்ணத்தை வழங்கிவைத்த போது,....

வளர்ந்து வரும் பெண்கள் பாடசாலை அணியா தேர்ந்தெடுக்கப்பட்ட எப்பாவல ஸ்ரீ சித்தார்த்தா மத்திய கல்லூரிக்கு ஊடகத்துறை அமைச்சின் செயலாளரும் லேக்ஹவுஸ் தலைவரான அனுஷ பல்பிட்ட கிண்ணத்தை வழங்கி வைத்த போது

லேக்ஹவுஸ் சட்ட மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் ஜனக ரணதுங்க மத்திய மாகாணத்தின் சிறந்த அணிக்கான விருதை கண்டி திரித்துவக் கல்லூரித் தலைவருக்கு வழங்கி வைத்தார்.

Pictures: Rukmal Gamage, Sulochana Gamage, Chinthaka Kumarasinghe, Shan Rupassala

வட மாகாணத்தின் சிறந்த பாடசாலை அணியான சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு லேக்ஹவுஸ் நிதிப் பணிப்பாளர் பேரா. ஹரேந்திர காரியவசம் கிண்ணத்தை வழங்கும் போது...

தென் மாகாணத்தின் சிறந்த பாடசாலை அணியான காலி மஹிந்த கல்லூரிக்கு லேக்ஹவுஸ் செயற்பாட்டுப் பணிப்பாளர் மஞ்சுள மகும்புரவிடமிருந்து விருதை பெற்றுக் கொண்டது.

லேக்ஹவுஸ் ஆசிரியப் பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி வடமேல் மாகாண சிறந்த பாடசாலை அணிக்கான விருதை குருநாகல் மலியதேவ கல்லுரிக்கு வழங்கினார்.

சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு...

தெரிவிக்கையில், 2023 ஆம் வருடத்திற்கு போதுமானளவு மசகு எண்ணெய்யை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதுடன் 8 கப்பல்களில் மசகு எண்ணெய்யை கொண்டுவருவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனைத் தவிர மேலும் ஆறு கப்பல் மசகு எண்ணெய்யை நாட்டுக்கு கொண்டுவருவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அந்த அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு அதன் மூலம் அடுத்த வருடத்திற்கான மின்சார உற்பத்திக்கு தேவையான நெப்தா எண்ணெய்யை போதியளவில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்

கடும் குளிரான...

விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

தற்போதைய மோசமான குளிர் காலநிலை வைரஸ் தொற்று, கொரோனா தொற்றுடன் அதிகரித்துள்ள டெங்கு நிலை காரணமாக அதிகமான நோயாளிகள் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த வாரம் மாத்திரம் சுமார் 40 டெங்கு நோயாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் விஜேவிக்கிரம தெரிவித்தார். டிசம்பர் மாதத்தின் முதல் சில வாரங்களில் கொழும்பு மாவட்டத்தில் 254 டெங்கு நோயாளரும் இம்மாதத்தில் நாடு முழுவதும் 1,323 டெங்கு நோயாளரும் பதிவாகியுள்ளனர்.

இந்த நோய்களைக் கண்டறிந்து சிகிச்சையளிப்பதற்காக மருத்துவரை அணுகுவது சரியான நடவடிக்கையென விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம சுட்டிக்காட்டியுள்ளார்.

108 சுற்றுலா பயணிகளுடன் ...

வந்தடைந்தது. அமெரிக்க நிறுவனமொன்றுக்கு சொந்தமான மேற்படி கப்பலின் நீளம் 105 மீற்றரெனவும் கப்பலின் அகலம் 18.5 மீற்றரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் கொச்சின் துறைமுகத்திலிருந்து நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ள மேற்படி கப்பல் இன்றைய தினம் திருகோணமலை துறைமுகம் வரை பயணிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கப்பலில் இலங்கைக்கு வருகைதந்துள்ள அமெரிக்காவின் செல் வந்த உல்லாசப்பிரயாணிகள் இரண்டரை தினங்கள் கொழும்பு, குருநாகல், ஹபரணை, சீகிரியா மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்கு அதி சொகுசு பஸ்கள் மூலம் பயணிக்கவுள்ளனர்.

அதனையடுத்து எதிர்வரும் 21 ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்தில் வைத்து மீண்டும் அவர்கள் கப்பலில் பயணிக்கவுள்ளதாக 'தேவ் மெரயின்' கப்பல் முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது. அதனையடுத்து மேற்படி 'ஓசன் ஓடிசி' கப்பல் எதிர்வரும் 21 ஆம் திகதி இரவு 07 மணிக்கு திருகோணமலை துறைமுகத்திலிருந்து தாய்லாந்து நாட்டிற்கு பயணிக்கவுள்ளதாகவும் அந்த முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள்...

வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பில் விழிப்பாகவே இருக்க வேண்டும். ஆசிரியர்களும் கல்விக்கப்பால், மாணவர்களின் நலன்கள், ஒழுக்கம் பற்றி கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

பொகவந்தலாவ சர்வதேச சாலம் முன்பள்ளி பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் (17) பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

திருமண வீடு, பிறந்தநாள் கொண்டாட்டம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு பெற்றோர் சகிதம் பிள்ளைகளும் செல்கின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் பிள்ளைகளுக்கு பரீட்சாத்தமாக போதைப்பொருள் வழங்கப்படுகின்றது. பின்னர் நிலைமை மோசமாகின்றது. எனவே, நிகழ்வுகளுக்கு பிள்ளைகளை அழைத்து செல்லும் பெற்றோர் அவர்கள்மீது கழுகுப்பார்வையை செலுத்தினால் நல்லது.

நாட்டில் நாளாந்தம் போதைப்பொருட்கள் கைப்பற்றப்படுகின்றன. இதன் பின்னணியில் செயற்படுவது யார்? பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகின்றது. பாதுகாப்பு பலமாக உள்ளது என பாதுகாப்பு தரப்பும் கூறுகின்றது. அப்படியானால் நாட்டுக்குள் போதைப்பொருள் வருவது எப்படி? இலங்கையானது ஒரு தீவு. காத்திரமான நடவடிக்கைகளை எடுத்தால் இதற்கு முடிவு கட்டலாம். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிகாலத்தில் போதைப்பொருட்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே, இலங்கையில் சமூக சீரழிவை ஏற்படுத்துவதற்கு சில நாடுகள் முற்படலாம். அவ்வாறான சூழ்ச்சிகளுக்குள் நாம் சிக்கிவிடக்கூடாதென்றும் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு...

மியன்மாரிலிருந்து இந்தோனேசியா செல்வதற்காக சிறுவர்கள் உட்பட 104 பேருடன் சென்ற அகதிகள் படகு வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடற்பகுதியில் சேதமடைந்த கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தது. இதனையடுத்து விசாரணை நடாத்தப்பட்டு, கடற்படையின் இரண்டு டோறா படகுகள் அகதிகள் படகுக்கு பாதுகாப்பு வழங்கி 104 பேருடன் காங்கேசன் துறை துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் சனிக்கிழமை மாலை மீன் பிடிக்க சென்றிருந்த மீனவர்கள், படகொன்று பழுதடைந்து கடலில் தத்தளித்தவாறு இருப்பதை கண்டுள்ளனர். அருகில் சென்று பார்த்த போது படகிலிருந்தவர்கள் தமது பிள்ளைகளை காண்பித்து உதவி கோரி அபய குரல் எழுப்பியுள்ளனர். உடனடியாக அது தொடர்பில் கடற்படையினருக்கு மீனவர்கள் அறிவித்தனர். அதனையடுத்து கடற்படையினர் அவ்விடத்துக்கு விரைந்து படகில் இருந்தவர்களுக்கு பாதுகாப்பளித்தனர். அத்துடன் படகையும், படகில் இருந்தவர்களையும் மீட்டு காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்து வந்தனர். வெளிநாட்டு படகு என்பதாலும், அதில் இருந்தவர்கள் வெளிநாட்டவர்கள் என்பதாலும் அவர்களை அழைத்து வருவதற்கான உரிய அனுமதிகள், நடைமுறைகள் என்பவற்றை பின் பற்றி அவர்களை காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்து வர சற்று தாமதமாகியது. நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியத்திற்கு பின்னரே, கரைக்கு அவர்களை அழைத்து வந்தனர். அழைத்து வரப்பட்ட அனைவரும் காங்கேசன்துறை துறைமுக கடற்படை முகாமில் வைக்கப்பட்டு, அவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது. மருத்துவ பரிசோதனைகளுக்கு பின்னேரே அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்து, வாக்கு மூலங்களை பதிவு செய்ய முடியும் எனவும், அதன் பின்னரே அவர்கள் தொடர்பில் தெளிவாக அறிவிக்க முடியுமென கடற்படையினர் தெரிவித்தனர்

யாழ். காரைக்கால்...

வர்த்தக ரீதியிலான கப்பல் சேவையென்றும் அவர் தெரிவித்தார். சிறிய கப்பல்கள்தான் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும். அவை 1,000 மெற்றிக் தொன்னுக்கும் குறைவான கொள்ளளவுடையவை என்றும் அவர் தெரிவித்தார்.

பாண் உள்ளிட்ட சிறு...

மூலப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதை கவனத்தில் கொண்டு இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். இதேவேளை, பாணின் விலை 10 ரூபாவால் நேற்று முன்தினம் முதல் குறைக்கவும் பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்தது.

போலிக் கடவுச்...

ஒப்படைக்கப்பட்டுள்ளனர். விசாரணைக்கு பின்னர் இது தொடர்பில் மேலதிக தகவல்கள் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பெந்தோட்டை உல்லாச...

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மோதர, மட்டக்குளி, வத்தளை, நாரஹேன்பிட்டி, மாளிகாவத்தை மற்றும் வலஸ்முல்ல பிரதேசங்களை சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (18) நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

சுமார் 23 பேரிடம்...

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்டுள்ள தினேஷ் சாப்டரின் கையடக்க தொலைபேசி மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட விசாரணைகளுக்கு தேவையான மேலும் கையடக்கத் தொலைபேசிகள் சிலவற்றினதும் பகுப்பாய்வு அறிக்கைகள் மூலம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்டுள்ள தினேஷ் சாப்டர் மொடல் பாம் பகுதியில் நிறைவேற்று அதிகாரியின் கையடக்கத் தொலைபேசிக்கு அவர் லொகேஷன் போட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். தினேஷ் சாப்டர் படுகொலை செய்யப்பட்டுள்ள தினத்தில் இரவு 08.15 மணியளவில் அவரது மனைவியுடன் அவர் இங்கிலாந்துக்கு தப்பிச் செல்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் ஏற்பாடு செய்திருந்ததாகவும் அதன் காரணமாக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு பிற்பகல் 04 மணிக்கு செல்வதற்கு தயாராக இருந்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிய வருவதாக அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இந்த படுகொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை கைது செய்வதற்காக குத்தத்தெடுப்பு விசாரணை திணைக்களத்தின் மனித படுகொலை மற்றும் திட்டமிட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமால் பிரசாந்தவின் வழிகாட்டலில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பொரளை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.ஜி .எம் .ஆர் சமரசிங்கவின் தலைமையிலான குழு ஒன்றும் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

தினேஷ் ஷாப்டரின் படுகொலை சம்பவம் தொடர்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் உயரதிகாரியொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் மனித படுகொலைகள் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்கள் தடுப்பு பிரிவிற்கு நேற்று அழைக்கப்பட்டுள்ள அவர், சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் உயரதிகாரி தெரிவித்தார்.

சமுதித்த சமரவிக்ரம படுகொலை செய்யப்பட்ட தினேஷ் ஷாப்டரின் படுகொலை சம்பந்தமாக யூடியூப் சனலொன்றின் ஊடகவியலாளரும் விமானப்படை அதிகாரியுமான கீர்த்தி ரத்நாயக்கவுடன் சுமார் 40 நிமிடங்கள் நேர்காணலொன்றை அன்றைய தினமே மேற்கொண்டுள்ளமையை அடிப்படையாக வைத்து நேற்றைய தினம் சமுதித்த சமரவிக்ரமவிடம் மேற்படி வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அந்த பொலிஸ் உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

90,000 சந்தேக நபர்கள்... 03 ஆம் பக்கத் தொடர்...

முழு வருடத்திலும் 1630 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 50,412 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 15,666 கிலோகிராம் கஞ்சாவுடன் 44,271 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 10 கிலோகிராமுக்கு அதிகமாக கொக்கெய்ன் போதைப்பொருளை வைத்திருந்த இருவரையும் 93 கிலோவுக்கு அதிகமான ஹஸிஸ் போதைப்பொருளுடன் 47 பேரையும் கைதுசெய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கு மேலதிகமாக 377 கிலோ மற்றும் 294 கிராம் ஐஸ் போதைப்பொருள் 25,813 போதைப்பொருள் குளிசைகளை, 119,346 போதைப்பொருள் வில்லைகள் ஆகியவற்றுடன் 14,101 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த வருடத்தில் இது வரையான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள போதைப்பொருள் சுற்றிவளைப்புக்களின் போது 1427 கிலோ மற்றும் 571 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 44,995 சந்தேகநபர்களும் 9897 கிலோ மற்றும் 745 கிராம் கஞ்சாவுடன் 33,001 சந்தேக நபர்களும் 370 கிலோ மற்றும் 112 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளுடன் 26 சந்தேகநபர்களும் 33 கிலோ மற்றும் 260 கிராம் ஹஸிஸ் போதைப்பொருளுடன் 55 சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பன்முகத் தன்மையை...

ஊடக அறிக்கையில் சமாதானப் பேரவை கூறியிருப்பதாவது ;

அரசியலமைப்பு பேரவை மீண்டும் அமைக்கப்படுவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் மட்டு மீறிய அதிகாரங்களைக் குவித்த அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து அண்மையில் கொண்டுவரப்பட்ட 21 ஆவது திருத்தத்தின் மிகவும் நலமிக்க அம்சமாகும்.

அரசியலமைப்பு பேரவை அரசாங்க உறுப்பினர்களையும் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் பக்கச்சார்பற்ற சிவில் சமூக உறுப்பினர்களையும் உள்ளடக்கிய அரசியல் ரீதியில் பக்கச்சார்பற்ற ஒரு அமைப்பாகும்.

அரசும் அதன் நிறுவனங்களும் நாட்டின் நலன்களுக்காக சிறப்பாக செயற்படக்கூடியதாக அவற்றை வலுப்படுத்துவதற்கு அரசியலமைப்பு பேரவை பங்களிப்புச் செய்யும் என்பதே நேர்மறையான எதிர்பார்ப்பாகும்.

ஆனால், அரசியலமைப்பு பேரவையில் சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தப்போகும் உறுப்பினர்களை நியமிப்பதற்கு கடைப்பிடிக்கப்படும் முறை விசனத்தை தருவதாக இருக்கிறது. பேரவையில் உறுப்பினராக இருக்க விரும்புபவர்களிடம் இருந்து தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்கள் கோரப்பட விருப்பதாக அரசாங்கம் விளம்பர அறிவித்தல் கொடுத்திருக்கிறது.

எந்தவொரு அரசியல் கட்சியிலும் உறுப்புரிமையைக் கொண்டிருக்காமல், பொதுவாழ்விலும் துறைசார் வாழ்விலும் தங்களுக்கென்று ஒரு பெயரை ஏற்படுத்திக்கொண்ட நேர்மையும் மேன்மையும் மிக்க நபர்கள் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு விரும்பாமல் இருக்கலாம். நியமனங்களைச் செய்வதற்கான ஏற்பாடொன்று இந்த நடைமுறைகளில் சேர்க்கப்படவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. பேரவையில் சிவில் சமூகத்தின் சார்பில் பிரதிநிதிகளாக இருக்கவேண்டியவர்களை சிபாரிசு செய்வதற்கு சிவில் சமூக அமைப்புக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

அரச நிர்வாக முடிவுகளை... 03 ஆம் பக்கத் தொடர்...

மிகை உற்பத்தியை நோக்கி இலங்கை செல்ல முடியுமென சர்வதேச சமூகம் நம்புகிறது.

பல அரச நிறுவனங்கள் மிகவும் பொறுப்புடனும் விடாமுயற்சியுடனும் செயற்பட வேண்டும். அறுபதாயிரம் பட்டதாரிகளுக்கு புதிய வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டன. அனைவரும் இந்த திட்டத்தில் இணைய வேண்டும். இந்த நெருக்கடியை வெற்றிகொள்வதில் ஒரு பங்காளியாக இருங்கள்.

கமநல சேவைகள் சட்டத்தின் விதிகளின்படி பயிரிடப்படாத எந்த ஒரு காணியிலும் விவசாயம் செய்ய விவசாய குழு முடிவு செய்யலாம். காணியை உரிமையாக்கிக்கொள்ளவன்றி விவசாயத்திற்கு பயன்படுத்தலாம். சவால்களை வெற்றிகொள்ளவும், உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தவும் நேரடியான முடிவுகளை எடுக்க வேண்டும். கட்சி பேதமின்றி ஒன்றிணைந்து இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்வது அவசியம். எமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப எமக்கு முடியும்.

அரச நிர்வாக முடிவுகளை நடைமுறைப்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அரச சேவையின் அடிப்படை விடயங்கள் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே பல வருடங்களாக நாட்டுக்கு பயனுள்ள நம்பகமான அரச சேவையை வழங்க முடியும்.

இல்லை என்றால் அரச சேவையினாலேயே அரச சேவை பின்னடையும் நிலை ஏற்படும் என்றார்.

அனைத்து நாடுகளுடனும்...

தியத்தலாவ இராணுவ கல்வியியற் கல்லூரியின் 97 ஆவது பயிற்சியை முடித்து வெளியேறும் கெடட் உத்தியோகத்தர்களின் பிரியாவிடை மரியாதை அணிவகுப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். தியத்தலாவ இராணுவ கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்த முந்நூற்று ஐம்பத்தொரு (351) கெடட் உத்தியோகத்தர்கள் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.

வெளிநாடுகளைச் சேர்ந்த நான்கு கெடட் உத்தியோகத்தர்களும் இங்கு பயிற்சி பெற்று அதிகாரிகளாக நியமிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும். இராணுவ கல்வியியற் கல்லூரிக்கு விஜயம் செய்த முப்படைகளின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் கௌரவத்துடன் வரவேற்கப்பட்டார். முதலில் அவ்வளாகத்திலுள்ள இராணுவ வீரர் நினைவிடத்துக்குச் சென்ற ஜனாதிபதி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

கெடட் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பை பார்வையிட்ட ஜனாதிபதி , சிறந்த கெடட் அணிக்கு சாம்பியன் கொடியை வழங்கியதுடன், கெடட் வீரர்களிடம் வாள்களையும் கையளித்தார்.

அதிகாரிகளாக நியமிக்கப்பட்டவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்ட ஜனாதிபதி, தனது விஜயத்தைக் குறிக்கும் வகையில் கல்லூரி மைதானத்தில் மரக்கன்று ஒன்றையும் நட்டினார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

இலங்கை இராணுவத்தின் தலைவர்கள் என்ற வகையில் உங்களுக்கும் இன்று முதல் பொறுப்பு உள்ளது. அதன்படி, இராணுவத்தையும் அதன் வீரர்களையும் பாதுகாக்கும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. மக்களின் அரசாங்கம் என்ற வகையில் உங்களுக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர்களைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. எதிரிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு பயிற்சியளிக்கும் நிறுவனத்தின் மரியாதையையும் அதன் நற்பெயரையும் எப்போதும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஒரு நாடு என்ற அடிப்படையில் நாம் உலக வல்லரசுகளிடமிருந்து ஒரு தரப்பாக பிரிந்து நிற்கவில்லை. உலக வல்லரசுகளுடன் நாம் ஒப்பந்தம் செய்து கொள்ளவில்லை. ஏனென்றால் நாம் ஒரு தீவு நாடு. அனைத்து நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்பட வேண்டும்.

இந்த நாட்டைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு. உள்ளக மற்றும் வெளிப்புற தாக்கங்களிலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் திறன் உங்களிடம் உள்ளது. உங்களை உள்ளடக்கிய எங்கள் இராணுவத்துக்கு இராணுவ அனுபவம் உள்ளது. மேலும் அவர்களுக்கு சர்வதேச போர் அனுபவம் உள்ளது. ஐ.நா படைகளுடன் இணைந்து மாலி அரசின் நடவடிக்கைகளில் நமது பாதுகாப்புப் படைகளும் பங்கு கொள்கின்றன. அதனால் சவால்களை சமாளிக்க முடியும். எதிர்காலத்தில் வரக்கூடிய சவால்களை எதிர்கொள்ளும் திறன் உங்களுக்கு உள்ளது. எனவே, அந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்து, நீங்கள் அனைவரும் வலுவாக முன்னேறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு ஈரானியர்கள்... 03 ஆம் பக்கத் தொடர்...

கடத்தப்பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் காலை சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனையடுத்து அவர்களை இலங்கைக்கு பயணித்த விமானத்திலேயே நாடுகடத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். 41 வயதான ஈரானிய இசைக்கலைஞர் ஒருவரும் 50 வயதான புகைப்படக் கலைஞர் ஒருவரும் இவ்வாறு நாடுகடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அவர்கள் போலி நோர்வே கடவுச்சீட்டுக்களைத் தயாரிப்பதற்காக, துருக்கியைச் சேர்ந்த தரகர் ஒருவருக்கு, 20 ஆயிரம் யூரோவை வழங்கியுள்ளதாக விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களின் பயணப் பையில் இருந்த, இரண்டு ஈரான் கடவுச்சீட்டுகளும் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கான....

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைக்கு எம்மை அழைத்திருக்கிறார். நிச்சயம் நாங்கள் அதில் கலந்து கொள்கின்றோம். அங்கு தமிழ் மக்களுக்கான நிரந்தரதீர்வு என்ன? என்பதை தெளிவாக எடுத்துரைப்போம்.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் காரைதீவில் தெரிவித்தார் . தமிழரசு கட்சி பிரமுகர் கதிராமத் தம்பி செல்வபிரகாஷ் தலைமையிலே காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் (17) சனிக்கிழமை மாலை இந்நிகழ்வு நடைபெற்றது. அங்கு சுமந்திரன் மேலும் பேசுகையில்.

நாட்டில் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு விதமான மன மாற்றம் தென்படுகின்றது. இதனை நாங்கள் சாதகமாக பயன்படுத்தி எமது மக்களின் பிரச்சினையை தீர்க்க வேண்டிய காலம் கனிந்துள்ளது.

அரசாங்கத்துடன் பேச்சு நடத்தாமல் எதுவும் செய்ய முடியாது. அங்கு நமது தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வு பற்றி தெளிவாக எடுத்துரைப்போம். குறிப்பாக வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வருகின்ற பிரதேசத்தில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி கட்டமைப்பில் அதி உச்ச அதிகார பகிர்வு தரப்பட வேண்டும். இதுவே எமது தெளிவான தீர்க்கமாக முடிவாக இருக்கின்றது. இதனை நாங்கள் ஜனாதிபதியிடம் நிச்சயம் தெளிவுபடுத்த இருக்கின்றோம். ஜனாதிபதி ரணிலை நம்புவதா? நம்பாமல் விடுவதா? என்பதெல்லாம் இப்பொழுது பிரச்சினை அல்ல.

எமது தீர்வை அங்கு தெளிவுபடுத்த வேண்டும். அதற்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது தான் இப்பொழுது பிரச்சினை. கடும் சிங்கள தேசியவாதம் உருவாகின்ற பௌத்த சம்மேளனம் போன்ற அரங்குகளில் நாங்கள் சமஷ்டி பற்றி பேசி இருக்கின்றோம். அவர்கள் அதனை மௌனமாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த நாட்டிலே தேர்தல் மூலமாக மட்டுமே ஆட்சி மாற்றம் இடம் பெற்றது. தேர்தலின்றி எந்த ஆட்சி மாற்றமும் இதுவரை இடம் பெறவில்லை. ஆனால் அண்மையில் காலிமுகத்திடலில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டம் சரித்திரத்தில் இடம் பிடித்தது.

ஆம் அசைக்க முடியாது என்று சொல்லும் அளவுக்கு கோட்டாபய முதல் மொட்டு அரசாங்கம் வரை கவிழ்த்து விட்டது.

இலங்கைக்கு தேர்தல் மூலமாக இல்லாமல் ஒரு போராட்டம் மூலமாக ஆட்சி அமைக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இது என்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது. நான் பாராளுமன்றத்தில் இப்பொழுது சமஸ்டி பற்றி பேசுகின்றேன். யாரும் வாய்திறப்பதில்லை. அன்று சமஸ்டி என்றால் அவர்களுக்கு கசத்தது. கூக்குரலிடுவார்கள். ஆனால் இன்று அதனை கூறுகின்ற பொழுது அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களோ இல்லையோ ஒரு மௌனத்தோடு கவனிக்கிறார்கள். அவர்கள் மத்தியிலும் அந்த மாற்றம் தென்படுகின்றது. எனவே நம்பிக்கையோடு பேச்சுவார்த்தையை நாங்கள் எதிர்கொள்வோம் என்றார்.

தேர்தல் மூலம் நாட்டின்... 03 ஆம் பக்கத் தொடர்...

மிகப்பெரிய சாதனையாகும். தேர்தல் வெற்றியை தீர்மானிக்கும் அதிகாரத்தை மக்களுக்கு வழங்க வேண்டும். ஜே.வி.பி உட்பட சில கட்சிகள் எப்போதும் பெருமையடிப்பதைத் தவிர வேறு எந்த வேலையும் செய்யவில்லை.

நாட்டில் நிம்மதியாக வாழ்வது, தாம் பெறும் சம்பளத்திற்கு ஏற்ற பொருளாதாரத்தை நாட்டில் உருவாக்குவது போன்ற விடயங்களைத் தவிர மற்றுமொரு போராட்டத்தை மக்கள் எதிர்பார்க்கவில்லை.

இந்த நெருக்கடியில் இருந்து எப்படி மீள்வது என்று நாம் பார்க்க வேண்டும். இன்று நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். சுற்றுலா பயணிகள் வரும்போது வெளிநாட்டு கையிருப்பு அதிகரிக்கிறது. பின்னர் போராட்டம் தொடங்குகிறது.

இந்த நெருக்கடியை நாம் ஒன்றாக எதிர்கொள்ள வேண்டும். தனித்தனியாக செயற்படுவதால் நாட்டுக்கு எந்த நன்மையும் ஏற்படாது எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கைக்கான கடனை...

உரிமையாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் உள்ளடங்கும். இறையான்மை கடன் தொடர்பில் வட்டமேசை கலந்துரையாடலொன்றை நடத்துவதற்கு சீன அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்றுள்ள சீன அதிகாரிகளுடனான உயர்மட்ட கூட்டங்களின் பின்னர் குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுள்ள நாடுகள் முகங்கொடுத்து வரும் முக்கிய கடன் நெருக்கடிகளுடன் செயற்படுவதற்கான எதிர்பார்ப்பு தொடர்பில் தமக்கு சிறந்த உணர்வு உள்ளதாகவும் அவர் அந்தக் கூட்டத்தின் போது தெரிவித்துள்ளார். அத்துடன் கடன் நெருக்கடி தொடர்பில் சிறந்த முறைப்படி தலையீடு செய்வதற்கு சிறந்த சந்தர்ப்பமொன்றுக்கான வாய்ப்பு உள்ளதாக சீனாவிற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொது வரையறையின் கீழ் கடன் மறுசீரமைப்பை விரைவுபடுத்துவது மற்றும் மத்தியதர வருமானம் பெறும் நாடுகளை உள்ளடக்கும் வகையில் அதனை விரிவுபடுத்துவதற்காக மறுசீரமைப்பு தொடர்பில் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படும் வேண்டுகோளின் பின்னர் அந்தக் கூட்டத்தின் இடைநடுவில் கடன் நெருக்கடி தொடர்பில் சீன தலைவர்கள் மத்தியில் சிறந்த நடுநிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் திறைசேரியின் செயலாளர் ஜெனட் யெலன் மற்றும் ஏன

இந்திய ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக உடன்படிக்கைக்கு ஜேர்மன் முழு ஆதரவு

ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

இந்தியாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகள் விரைவிலேயே மீண்டும் ஆரம்பமாக வேண்டும் என ஜேர்மன் எதிர்பார்த்திருப்பதாகவும் இவ் வர்த்தக உடன்படிக்கை வெற்றிகரமாக கைச்சாத்தாவதற்கான முழு ஒத்துழைப்பையும் தமது நாடு வழங்கும் என்றும் ஜேர்மன் வெளிநாட்ட மைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கும் புதுடில்லிக்கு வருகை தந்திருந்த ஜேர்மனிய வெளியுறவு அமைச்சர் அன்னலீனா பெயர்பொக் அவர்களுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பில் ஜேர்மன் நிலைப்பாட்டை வெளியுறவு அமைச்சர் இவ்வாறு தெரிவித்ததாக இந்திய வெளியுறவு அமைச்சு விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், முதலீட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றும் புவிசார் குறியீட்டு ஒப்பந்தம் என்பன செய்துகொள்வதற்கான இணக்கம் காணப்பட்டிருந்தாலும் அவை முழுமை அடையவில்லை. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஜேர்மனியே இந்தியாவின் பெரிய வர்த்தக பங்காளியாக திகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2020 ஆம் ஆண்டில் ஜேர்மனிய அரசு இந்தோ பசுபிக் பிராந்தியத்துக்கான வழிகாட்டல்களை வெளியிட்டது. கடந்த ஜனவரியில் மும்பை துறைமுகத்துக்கு ஜேர்மனிய யுத்தகப் கப்பல் வந்து சென்றது. இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் ஜேர்மனியின் இந்தப் பிரவேசம் இந்தியாவினால் வரவேற்கப்பட்டது. இதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டின் கீழ் புதுடில்லியில் கல்விசார் வளர்ச்சி கழகம் அமைக்கப்பட்டதோடு மாணவர்களுக்கு 18 மாத ஜேர்மன் விசா, வருடத்துக்கு மூவாயிரம் பேருக்கு தொழில் விசா, ஒரு தடவைக்கு மேலும் இந்தியர்களுக்கு விசா வழங்குதல் ஆகிய நன்மைகள் இந்தியாவுக்கு கிடைத்துள்ளன.

குர்ஆனை கையெழுத்தில் எழுதிய மாணவி

காஷ்மீரிகள் பாராட்டு

ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த 11 ஆம் வகுப்பு உயர்நிலைப் பள்ளி மாணவி புனித குர்ஆனை 900 பக்கங்களில் தன் கையெழுத்தாலேயே எழுதி சாதனை படைத்துள்ளார். ஆறு மாத காலத்தில் இவர் இதை எழுதி முடித்திருக்கிறார். அவரது இம் முயற்சியையும் அர்ப்பணிப்பு சிந்தனையையும் மக்கள் பாராட்டி வருவதோடு சமூக வலைத்தளங்களில் பல்லாயிரக் கணக்கானோரின் பாராட்டையும் பெற்று வருகிறது.

காஷ்மீரின் பண்டிபோரா பகுதியைச் சேர்ந்த இம்மாணவி தனது முயற்சிக்காக அச்சொட்டாக எழுத பழகிக் கொண்டதாகவும் பின்னர் தாள்களில் குர்ஆன் வசனங்களை எழுதத் தொடங்கி ஆறு மாதங்களில் தன் பணியை பூர்த்திசெய்ததாகவும் அவளது பெற்றோர் ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

கண்டி பேராதனை வீதியில் அமைந்துள்ள லைட் ஹவுஸ் கிறிஸ்தவ தேவாலயத்தில் நத்தார் இன்னிசை கீதம் இலங்கை சுயாதீன திருச்சபைகளின் தலைவர் அதி வண. கலாநிதி சி. நித்தியானந்தன் தலைமையில் நேற்று இடம் பெற்றது. படம்: மாவத்தகம தினகரன் நிருபர்

சிங்கள மொழி மூல; கட்டுரைப்போட்டியில் பாத்திமா பர்ஹானா முதலிடம் பெற்று சாதனை

பாணந்துறை நூலகத்தினால் பாடசாலை மாணவர்களிடையே ஏற்பாடு செய்யப்பட்ட சிங்கள மொழி மூலமான கட்டுரைப்போட்டியில் ஹுஸைன் பாரி பாத்திமா பர்ஹானா என்ற மாணவி முதல் இடம்பெற்று சாதனை படைத்துள்ளார். பாணந்துறை எலுவில கிராமத்தை வசிப்பிடமாகக்கொண்ட மேற்படி மாணவி, 'சமூக ஒழுக்கங்களை பேணுவதன் மூலம் சமூகத்தை கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற கட்டுரைப்போட்டியிலேயே வெற்றி பெற்று தான்சார்ந்த பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். பாத்திமா பர்ஹானா தனது ஆரம்ப கல்வி முதல் 11ஆம் தரம் வரை பாணந்துறை 'அகமதி பாலிகா' மகா வித்தியாலயத்தில் பயின்றார். தற்போது தனது உயர்கல்வியை நீலகிரி சென்போல்ஸ் பாடசாலையில் பயின்று வருகின்ற இவரை, பாடசாலை அதிபர் உட்பட பாடசாலை சமூகங்களும் பாராட்டியுள்ளன.

ஆறுமுகநாவலர் அறப்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலியாவிலுள்ள சேவா சர்வதேச அமைப்பின் ஆதரவுடன கண்டி மாவட்டத்தில் உள்ள வறிய பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கும் நிகழ்வு கண்டி இந்து கலாசார மண்டபத்தில் மத்திய மாகாண இந்து மாமன்றத்தின் தலைவர் துரை. சிவசுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முருகாமலை தேவாஸ்தான அறங்காவலர் சபையின் தலைவர் எஸ். முத்தையா, அதன் செயலாளரும் சமூக சேவையாளர் பி. பழனியப்பன், இந்து ஸ்வயம்சேவா சங்கத்தின் தலைவர் எம். ஸ்ரீகாந்தன் உள்ளிட்ட பிரமுகர்களுடன் பெரு எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். படங்கள்: இக்பால் அலி

இலங்கை துறைமுக அதிகார சபை

திருத்தம் பற்றிய அறிவித்தல்

1. 2022 டிசம்பர் 08 மற்றும் 09ஆம் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் 2022-12-20ஆம் திகதி திறக்கப்படுவதாக ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலின் கேள்விகள் முடிவுறுத்தப்படும் திகதி பின்வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

கேள்வி இல.	கேள்வியின் பெயர்	முன்பு பிரசுரிக்கப்பட்ட முடிவுறுத்தப்படும் திகதி	புதிய முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம்
CMS/LP/22/ PT/16/015	Restoration of Crane Monitoring System of Transfer Cranes at JCT	2022-12-20 பி.ப. 1.30 மணி	2022-12-27 பி.ப. 1.30 மணி

ஏனைய நிபந்தனைகள் மாற்றமின்றி அவ்வாறேயிருக்கும்.

வழங்கல் பிரிவு,
இலங்கைத் துறைமுக அதிகார சபை,
இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,
கொழும்பு 01.
தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 24824832, 2482409
தொலைநகல் இல. 2381652, 2470443

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

2022 டிசம்பர் 21ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 85,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

முதிர்வுக் காலம்	91 நாட்கள்	182 நாட்கள்	364 நாட்கள்	மொத்தம்
ஐஎஸ்ஐஎன்*	LKA09123C245	LKA18223F237	LKA36423L221	
முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.)	40,000	25,000	20,000	85,000

ஏல விற்பனைத் திகதி : 2022 டிசம்பர் 21
தீர்ப்பனவுத் திகதி : 2022 டிசம்பர் 23
வழங்கப்படும் திகதி : 2022 டிசம்பர் 23
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 டிசம்பர் 21 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.

அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட்	2206297
இலங்கை வங்கி	2541938
கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட்	2317777
இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி	2332319
ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி	2639883
என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட்	2425010
மக்கள் வங்கி	2206783
சம்பத் வங்கி பிஎல்சி	2305842
செலான் வங்கி பிஎல்சி	2456340
வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட்	2675096

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

என்.டி.வை.சி.வீரசிங்க
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்

வழங்கும் அலுவலகம்:
பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.
தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687
வெப்தளம்: www.cbsl.gov.lk

மஹியங்கனை பிரதேச சபை

மஹியங்கனை சீ.டீ.பி பஸ் தரிப்பிட கட்டிடத்தில் அமைந்துள்ள கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல்

01. மஹியங்கனை சீ.டீ.பி பஸ் தரிப்பிட வளவில் 24 கடை அறைகளை நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு விட முறையான பெறுகை நடைமுறைக்கு அமைய மஹியங்கனை பிரதேச சபை மூலம் கேள்விமனுக்கள் ஏற்கப்படும்.

02. கேள்விமனு விண்ணப்பப் படிவங்களை 2022.12.19 ஆம் திகதி தொடக்கம் 2022.12.30ஆம் திகதி நண்பகல் 12.00 வரை வழங்கப்படுவதோடு, 2022.12.30 ஆம் திகதி பி.ப.1.00க்கு கேள்விமனு விண்ணப்பங்கள் ஏற்பது முடிவுறும். அன்றைய தினமே 2022.12.30 ஆம் திகதி பி.ப. 1.30க்கு கேள்விமனுக்கள் திறப்பது இடம்பெறும்.

03. மஹியங்கனை பிரதேச சபைக்கு மீளளிக்கும் அடிப்படையில் ரூபா 15,000.00 பிணை வைப்பு ஒன்றை வைப்புச் செய்து கேள்விமனு விண்ணப்பப் படிவக் கட்டணமாக ரூபா 5,000.00 செலுத்தி கேள்விமனு விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும். அதனை சரியாக நிரப்பி 12x6 அளவான கடித உறையில் இட்டு உறையை முத்திரை இட்டு தலைவர், பிரதேச சபை, மஹியங்கனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது மஹியங்கனை பிரதேச சபையில் முத்திரை இடப்பட்டு வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு 2022.12.30 ஆம் திகதி பி.ப. 1.00க்கு முன்னர் கொண்டுவந்து இட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சீ.டீ.பி பஸ் தரிப்பிட இலக்கம் ..... கொண்ட கடை அறைக்கு விலைமனு வைத்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

04. கேள்வி இடும் கடை அறைகள் தொடர்பிலான விபரம் கீழுள்ள அட்டவணையை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

கட்டிடம்	கடை இலக்கம்	சதுர அடி அளவு	குறைந்தபட்ச விலைமனு தொகை (ஒரு கடையின் விலை)	மாதாந்த கடை வாடகை
தரைத் தளம் பிளொக் ஏ	12,13	194	1,900,000.00	10,000.00
தரைத் தளம் பிளொக் பி	14, 15, 20, 21	194	1,700,000.00	8,500.00
மேல் மாடி பிளொக் ஏ	25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34	194	1,300,000.00	7,000.00
மேல் மாடி பிளொக் பி	35, 36, 37, 38, 39, 40, 41, 42	194	1,100,000.00	5,500.00

05. அந்தந்த கடை அறைகளுக்காக தேர்வு செய்யப்படுகின்ற குத்தகைதாரர்கள் குறித்த கடை அறைக்கான விலைமனுத் தொகையின் 40% இனை அந்த சந்தர்ப்பத்திலேயே செலுத்த வேண்டும் என்பதோடு 30% ஆன இரண்டாவது பகுதியை கேள்விமனு திறக்கப்பட்ட திகதியில் இருந்து 14 நாட்களுக்கு உட்பட்டும் 30% ஆன மூன்றாவது பகுதியை கேள்விமனு திறக்கப்பட்ட திகதியில் இருந்து 28 நாட்களுக்கு உட்பட்டும் செலுத்த வேண்டும்.

06. மேலதிக விபரங்களுக்கு 055-2257275 என்ற தொலைபேசிக்கு அலுவலக நேரங்களில் மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 4.00 வரையான நேரத்துக்குள் அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர், பிரதேச சபை – மஹியங்கனை
கே.பீ. குணவர்தன
தலைவர்
பிரதேச சபை – மஹியங்கனை

திகதி 17.12.2022 சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4972
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.9,992,820.00
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 4 5 1 9 7 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,562,999.00

திகதி 16.12.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4971
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,183,720.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 3 4 9 4 4 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,870,117.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 1002
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,404,200.00
Y 08 36 72 82 வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 138,017,941.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 1001
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,649,540.00
B 04 55 59 71 வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 137,809,442.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3214
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,483,120.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 15 21 71 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.63,647,646.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3213
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.4,851,760.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 02 10 28 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.63,290,614.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 281
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.8,429,520.00
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 18 31 41 54 விசேட இலக்கினம் கும்பம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,555,323.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 280
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.11,305,245.80
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 14 16 52 55 விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,500,000.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1427
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,060,080.00
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 3 5 5 8 8 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,182,137.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1426
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,262,040.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 6 3 1 0 1 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,118,743.60

மேல் 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1320
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,562,920.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.287,004,410.00
ஆங்கில எழுத்து A சுப்பர் நம்பர் 20 வெற்றி எண்கள் 26 28 32 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

மேல் 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1319
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,686,760.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.286,763,654.00
ஆங்கில எழுத்து Z சுப்பர் நம்பர் 09 வெற்றி எண்கள் 14 26 36 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011-4607001-2 பெக்ஸ்: 011-4669475 Email: info@nlb.lk Web: www.nlb.lk
இலக்கம் 32, தேவநாண்டு N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

வெற்றியைத் தருவார் ஆஞ்சநேயர்!

அஞ்சனை மைந்தன் என்றும் ராமபக்தன் என்றும் கொண்டாடப்படுகிற அனுமனுக்கு மூன்று மாலைகள் அணிவித்து வேண்டிக்கொள்வது ரொம்பவே விசேஷம். தொடர்ந்து அனுமனை தரிசித்து வந்தால், எடுத்த காரியங்கள் அனைத்தும் ஜெயமாகும். தடைகள் அனைத்தும் அகலும். குடும்பத்தில் நிம்மதியும் அமைதியும் குடியேறும் என்பது ஐதீகம்.

மாசி மாதம் எல்லா தெய்வங்களையும் வணங்குவதற்கு உரிய விசேஷமான மாதம். இந்த மாதத்தில் நாம் செய்யும் வழிபாடுகள் அனைத்தும் மும்மடங்கு பலன்களைக் கொடுப்பவை.

அனுமன் வழிபாடு எப்போதுமே வலிமையை தரக்கூடியது. நம் கண்ணுக்குத் தெரியாத எதிரிகளையும் எதிர்ப்புகளையும் கூட பலமிழக்கச் செய்துவிடுவார் ஆஞ்சநேயப் பெருமான். புதன், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில், அனுமன் வழிபாடு செய்வது சிறப்புக்கு உரியது.

அஞ்சனையின் மைந்தனான ஆஞ்சநேயப் பெருமானுக்கு தன்னுடைய திருநாமத்தைச் சொல்லி வேண்டிக் கொள்வது கூட அத்தனை சந்தோஷமாக இருக்காதாம். 'ஸ்ரீ ராமஜெயம்' என்று சொல்லிக் கொண்டே இருந்தால், மகிழ்ந்து நமக்கு அருளுவாராம் அனுமன். அதேபோல், ஸ்ரீராமஜெயம் எழுதி, அதை மாலையாக்கி அனுமனுக்கு சார்த்தினால், குளிர்ந்து நமக்கு அருளிச் செய்வார் என்று போற்றுகிறார்கள் பக்தர்கள்.

எளிமையான வழிபாடுகளில் அனுமன் வழிபாடும் ஒன்று.

'அனுமன் சாலீசா' பாராயணம் செய்து வேண்டிக்கொள்ளலாம். அல்லது அதனை ஒலிக்க விட்டுக் கேட்டபடி அனுமனை வழிபாடு செய்யலாம்.

அனுமனுக்கு மூன்று மாலைகள் விசேஷம். துளசி மாலை சார்த்தி வேண்டிக்கொள்ளலாம். வெற்றிலை மாலை சார்த்தி வேண்டிக்கொள்ளலாம். வடை மாலை அணிவித்து அலங்கரித்து நம் கோரிக்கைகளை அவரிடம் வைத்து முறையிட்டுப் பிரார்த்திக்கலாம்.

மேலும் வெண்ணெய்க் காப்பு சார்த்தி வேண்டுவதும் எண்ணற்ற பலன்களைத் தரும். தம்பதி இடையே ஒற்றுமையை ஏற்படுத்தும். பிரிந்த தம்பதி ஒன்று சேருவார்கள் என்கிறார்கள் பக்தர்கள்.

மானுடவியல் (தொடர்)

மூர்த்தி நாயனார்

99

மூர்த்தி நாயனார் தமிழ் வளர்த்த மதுரையில் வணிகத்தொழில் செய்யும் குடும்பத்தில் அவதரித்தவர் மூர்த்தி எனும் அடியார் பெருமானார். மதுரை ஆலவாய் அண்ணலிடம் பேரன்பு கொண்டிருந்தார். பெரும் வணிகராய் இருந்த போதிலும் தினமும் மதுரை சொக்கேசருக்கு சந்தன காப்பிடுவதற்கு, சந்தனக்கட்டை அரைத்து தரும் பணியைச் செய்து வருவதை குறிக்கோளாய் கொண்டிருந்தார். அப்போது மதுரையை கருநாடகத்தைச் சேர்ந்த மன்னன் ஒருவன் கைபற்றினான். அவன் பிறநெறியை சார்ந்தவன். ஆதலினால் பிறநெறி முறையும், அதனுடைய குருமார்களையும் பெரிதும் ஆதரித்தான். சைவ சமயத்தை பின்பற்றுபவர்களை பிறநெறி சமயத்திற்கு மாற்ற முற்பட்டான். அவ்வாறு மாறாதவர்களுக்கு பெரும் துன்பத்தை விளைய செய்வித்தான். அவனுடைய கொடுமைகள் மூர்த்தி அடியாருக்கும் தொடர்ந்தது. எனினும் அவர் சொக்கேசனுக்கு சந்தனம் அரைத்துக் கொடுக்கும் பணியை இடைவிடாது தொடர்ந்து செய்த வண்ணம் இருந்தார். கோபமடைந்த மன்னன் மூர்த்தியாருக்கு சந்தனக் கட்டை கிடைக்க விடாமல் சதிசெய்ய திட்டமிட்டான். அவனுடைய சதிதிட்டத்தால் ஒருநாள் மூர்த்தி நாயனார் மதுரை முழுவதும் சந்தனக்கட்டை தேடி அலைந்தும் கிடைக்காமல், போயிற்று. கவலையுடன் திருஆலவாய் உறையும் சொக்கன் திருக்கோவிலை அடைந்தார்.

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் நடத்திய ஆடற்கலைப் போட்டியில் கொழும்பு 13, ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய அறநெறி பாடசாலை சார்பில் பங்குபற்றிய ஜசிதர் அடன்சி, முரளிதரன் அபினாசுகி, மாகன தனுஷியா, சுரேஸ் தனுஷிகா, ரதிஸ்குமார் வித்தியா, மகேஸ்வரன் துஷாராணி, மோகன சுந்தரம் தருஷன், பன்னீர் செல்வம் யக்ஷனா, ஜசிதர் டிலக்ஷன், விஷ்ணுமோகன் அக்ஷிதா ஆயூஷி ஆகியோரை படத்தில் காணலாம்.

உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த கார்த்திகைத் தீபம்

உடப்பு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த கார்த்திகைத் தீபம், மற்றும் பௌர்ணமிப் பூஜைகள் அண்மையில் (7) இடம்பெற்றன. இதன் போது விஷேட பூஜையும், அன்னதானமும் இடம்பெற்றது. உடப்பு குறூப் நிருபர்

கணபதி நம் குணநிதி!

ஒரு செயலை செய்ய ஆரம்பிக்கும் முன், அது தடையின்றி நடக்க, விநாயகரை வணங்கி அவருடைய அனுக்ரகத்தைக் வேண்டுகிறோம். அம்பாள் பண்டாசுரனை வதம் செய்யும் போது, அசுரனும், அவனுடைய சகாக்களும் எய்த பாணங்களை, தன் யந்திரத்தினால் வீழ்த்தி, தேவியை வெற்றி பெறச் செய்தார் விநாயகர் என்பதை, லலிதா சகஸ்ரநாமத்தில், 'மஹா கணேச நிர்பின்ன விக்னயந்த்ர ப்ரஹர்ஷிதா' என்ற நாமா மூலம் அறியலாம். இதன் மூலம், இக்கட்டான சூழ்நிலையில் ஒரு செயலை முடிக்க நினைப்பவர்கள், விநாயகரை வணங்கி அந்த காரியத்தை துவங்கினால், அவர் நல்லபடியாக முடித்து தருவார்.

விநாயகருக்கு மிக எளிய உணவுகளே நைவேத்தியமாக படைக்கப்படுகிறது. ஆனால், அந்த எளிய உணவுக்குள் மிகப்பெரிய தத்துவங்கள் புதைந்துள்ளன. அவருக்கு மிகவும் பிடித்தது மோதகம்; இதன் வெளிப்பகுதி வெள்ளையாகவும், உள்ளே மஞ்சள் நிற இனிப்பு பூரணமும் இருக்கிறது. மனதை வெள்ளையாக வைத்துக் கொண்டால், கண்ணுக்குத் தெரியாத இறைவனை அடையலாம் என்ற தத்துவத்தின் அடிப்படையில், இது விநாயகருக்கு படைக்கப்படுகிறது.

அதேபோல் கரும்பும் இவருக்கு பிடிக்கும்; இனித்தாலும் கடிப்பதற்கு கடினமானது கரும்பு. வாழ்க்கையும் இப்படித்தான், கஷ்டப்பட்டு உழைத்தால், இனிமையாக வாழலாம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் இது படைக்கப்படுகிறது. அவல், பொரியை இவருக்கு படைப்பர்; ஊதினாலே பறக்கக்கூடியவை இப்பொருட்கள், வாழ்க்கையில் நாம் சந்திக்கிற துன்பங்களை ஊதித்தள்ளி விட வேண்டும் என்பதை குறிக்கிறது.

அம்பாளுக்கு நவராத்திரி போல, விநாயகருக்கும் நவராத்திரி உண்டு. விநாயகர் சதுர்த்தியைத் தொடர்ந்து வரும் ஒன்பது நாட்களை, 'விநாயகர் நவராத்திரி' என்பர். ஒரு காலத்தில், இந்த ஒன்பது நாட்களும் விரதம் இருந்து விநாயகரை பூஜித்து, ஒரு விழாவாகவே கொண்டாடி உள்ளனர். இவ்விரதத்தை அனுஷ்டிப்போருக்கு நிகழ்கால வாழ்வில் செல்வமும், வாழ்வுக்குப் பின் மோட்சமும் கிடைக்கும் என்பர். குணநிதியான கணபதியின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்!

"யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 19

தவறான கண்ணோட்டம் கொண்ட ஒருவன், சாதாரண துன்பத்தைக் கூட, தன் தவறான மதிப்பீட்டால், மிகப் பெரிய துன்பமாகக் கருதி கவலைப்படுகிறான். கவலை வளர்த்துக் கொள்கிறான். சின்னக் குறைபாடு அல்லது சின்னளவில் உடல் நல மின்மை அல்லது சிறிய கடுகு அளவு பாதகமான சூழ்நிலை வந்தாலும் மலையளவு நினைத்து பயம் கொள்கிறான். தேவையின்றி கலங்குகிறான். மனவலிமையை பொறுத்தே சூழ்நிலைகளின் தாக்கம் அமையும். காய்ந்த விறகுக் கட்டையில் நெருப்பு எளிதில் பற்றி விடும். ஆனால் ஈரமான விறகுக் கட்டையில் நெருப்பு அவ்வளவு எளிதாகப் பற்றாது. பலவீனனை தாக்கும் அளவிற்கு நோய் பலமுள்ளவனை தாக்காது. வறண்ட நிலம் நீரை உறிஞ்சும் அளவிற்கு ஈரமான நிலம் உறிஞ்சுவதில்லை. மெல்லிய, வெள்ளை துணியில் சாயம் ஏறும் அளவிற்கு கடினமான அழுக்கு துணியில் ஏறுவதில்லை. அதே போல் பலவீனமானவன் பாதகமான சூழ்நிலையை கூட தாங்கிக்கொள்ளும் மனவலிமை இன்மையில் கவலைப்படுகிறான் அல்லது துன்பப்படுகிறான்.

உலகத்தில் வெற்றி, அழகு, சுகம், அமைதி பெற விரும்புவன் தனக்கு எதிரான பாதகமான சூழ்நிலையினை. சரியான கண்ணோட்டத்துடன் நோக்கி எதிர் கொண்டு, தமக்கு சாதகமான சூழ்நிலையாக மாற்றிக் கொள்ள முடியும். அதற்கு பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் உலகின் அனைத்து பொருட்களும். வாழ்வில் தான் சந்திக்கும் அனைத்து சூழ்நிலைகளையும் கண்டு கலங்கி பயந்து சுகத்தையும் அமைதியையும் இழந்துவிடுவான்.

உணர்வுகளை செயல் வடிவமாக மாற்றினால் தான் அந்த உணர்வுகள் நன்கு வளரும். மனதளவில் உதவி செய்திட நினைத்தால் மட்டும் போதாது. மனதில் நினைத்தப்படி தேவைப் படுவோருக்கு தக்க உதவி செய்யும் போது தான் அது சேவை என்ற பெயர் கொள்ளும்.

நோய்ப்பட்ட ஒருவனுக்கு சேவை செய்ய நினைப்பவர், அந்த நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும். மருந்து மாத்திரைகளை வாங்கி கொண்டு வந்து தர வேண்டும். தேவைப்பட்டால் நோயாளிக்கு மருந்து ஊட்டவும் செய்ய வேண்டும். இவ்வளவும் செயல் வடிவம் பெறும் போது தான் அது சேவையாகக் கருதப்படும். இவ்வித சேவையால் மட்டுமே நோயாளிக்கும் சேவை செய்தவருக்கும் நன்மை ஏற்படும்.

பசித்தவனுக்கு உணவு. நிர்வாணமாய் நிற்பவனுக்கு ஆடை, மூடனுக்கு கல்வி,முடவனுக்கு கைத்தடி, நோயாளிக்கு மருத்து கொடுக்க வேண்டும் என நினைத்தால் மட்டும் போதாது. நினைத்தப்படி கொடுத்தால் தான் சேவை எனப்படும். உணர்வு மட்டும் ஒருவனை இன்புறச் செய்யாது.உதவும் போது தான் அனைவருக்கும் இன்பம் பிறக்கும்.

பிறர் நலன், பொது நலன் கருதி எந்தளவு நாம் சுயநலத்தை தியாகம் செய்கிறோமோ அப்போது நாம் தெய்வத் நன்மையை அடைகிறோம். அதிகாரத்தை செலுத்தி பிறரை அடிமைப் படுத்தாமல், பதவி மூலம் அனைவருக்கும் உதவி செய்தல் தெய்வ தன்மையாக கருதப்படும்.

என்று நம் சுயநலம் பொது நலமாக மாறுகிறதோ, பதவி அதிகாரம் கடமையாக மாறுகிறதோ அன்று, நம்மிடமுள்ள அரக்கத்தனம் மாறி தெய்வத் தன்மையை நோக்கி முன்னேறுவோம். அதனை உடனே செய்திடுவோம்.

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

அறநெறி அறிவுநொடி

கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

19390) மஞ்சள் நிற பூக்களை கனவில் கண்டால் என்ன நடக்கும்?
மங்கள நிகழ்ச்சிகள் நடக்கும்.

19391) மல்லிகை பூவை கனவில் கண்டால் என்ன நடக்கும்?
மிகவும் நல்லது. வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்க போகிறது என்று அர்த்தம். நல்ல கனவுகள் நல்லது நடக்கப்போவதை முன்கூட்டியே உணர்த்துகின்றன.

19392) வெள்ளை தாமரையை கனவில் கண்டால்...?
சரஸ்வதி தேவியின் பரிபூரண அருள் கிடைக்கும். கல்வியில் உயர்வான நிலையை அடைவீர்கள்.

19393) முல்லை பூவை கனவில் கண்டால்...?
அம்மா வழியில் தேவையான உதவிகள் கிடைக்கும்.

19394) பன்னீர் பூவை கனவில் கண்டால்....?
வெளியூர் அல்லது வெளி நாடுகளில் இருந்து நல்ல செய்தி வந்து சேரும்.

19395) பவளமல்லி பூவை கனவில் கண்டால்...?
தந்தை வழி உறவுகளால் நன்மை ஏற்படும் என்று அர்த்தம்.

19396) சாமந்தி பூவை கனவில் கண்டால்.....?
குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடக்க போகிறது என்று அர்த்தம்.

19397) அல்லி பூவை கனவில் கண்டால்.....?
மனைவி வழி உறவினர்களால் நன்மை வரப்போகிறது என்று உணர்த்துகிறது

19398) ரோஜா பூக்களை கனவில் கண்டால்....?
நீங்கள் செய்த செயலுக்கு பாராட்டுகள் குவியும். மேலும் அனைத்து விதத்திலும் நன்மை உண்டாகும்.

19399) வாடாமல்லி பூவை கனவில் கண்டால்...?
உறவினர்களால் உதவி கிடைக்கும் என்று பொருள்.

செடியில் இருந்து பூக்களை பறிப்பது போல கனவு கண்டால்...?
நல்ல பலன்கள் கிடைக்கும். நிலம் வீடு, நகை வாங்கும் யோகம் ஏற்படும்.

19400) நறுமணம் உள்ள பூக்களை கனவில் கண்டால்....?
திருமணம் கூடி வரும். காதலில் வெற்றி கிடைக்கும்.

19401) கர்ப்பிணி பெண்கள் கனவில் தாமரை மற்றும் வெள்ளை நிற பூக்கள், பழங்கள் குறிப்பாக மாங்காய் மற்றும் மாம்பழம் வந்தால்....?
பிறக்கும் குழந்தை ஆணாக இருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.
அதே போல கனவில் செம்பருத்தி, ரோஜா ஆகிய சிவப்பு நிற பூக்கள் வந்தாலோ வாழைப்பழம் வந்தாலோ.....?
பெண் குழந்தை பிறக்கும் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

ஆறுமுக நாவலர் அறநெறி அறிவு நொடி போட்டி

படங்கள்: எம்.நஸார்

ஆறுமுக நாவலர் பெருமானின் 200வது நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கொழும்பு 14, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, ஸ்டேடியத்திற்கு எதிரே உள்ள கலைமகள் அறநெறி பாடசாலை அறநெறி பாடசாலைகளுக்கிடையே நடத்திய ஆறுமுக நாவலர் அறநெறி அறிவுநொடி போட்டியின் போது பிடிக்கப்பட்ட படம்.

கிழக்கின் குரல்

பொத்துவில் அறுகம்குடா உல்லாச விடுதிகளுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்க நடவடிக்கை

ஒலுவில் விசேட நிருபர்

பொத்துவில் அறுகம்குடா பிரதேசத்தில் அமைந்திருக்கும் உல்லாச விடுதிகளுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னான்டோ வாக்குறுதியளித்துள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷாரப் தெரிவித்தார்.

வருடந்தோறும் பல்லாயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்ற அருகம்குடா பிரதேசத்தில் அமைந்திருக்கும் விடுதிகளுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பாக அமைச்சர் ஹரின் பெர்னான்டோவிடம் நடைபெற்ற பேச்சுவார்த்தையை யடுத்து வாக்குறுதியளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பல தசாப்தங்களுக்கும் மேலாக இங்கு சுற்றுலாப் பயணிகளுக்கு சேவை வழங்கும் விடுதி உரிமையாளர்கள் இதுவரை காணி அனுமதிப் பத்திரங்களையே கொண்டிருக்கின்றனர். காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. இதனால் இங்கு சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதில் பல தடங்கல்கள் காணப்படுகின்றன. புதிய கட்டுமானங்களுக்காக நகரத் திட்டமிடல் அதிகாரசபையின் அனுமதியைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதனை நிவர்த்திக்கும் பொருட்டு அவர்களுக்கான காணி உறுதிப்பத்திரங்களை விரைவாக வழங்கி வைக்குமாறும் ஏற்கனவே திட்டமிட்டு முடிவுறுத்திப்பட்டதற்கிணங்க அருகம்குடாவை சுற்றுலா வலயமாக அறிவிக்கின்ற வர்த்தமானியை அவசரமாக வெளியிடும்படியும் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாய்ந்தமருதில் போதைப்பொருளுக்கு எதிரான பிரகடனம்;

சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நடவடிக்கை

போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை செய்பவர்களின் இல்லத்தில் இடம்பெறும் திருமண, ஜனாஸா கடமைகளுக்கு சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலினால் எவ்வித ஒத்துழைப்பும் வழங்கப்பட மாட்டாது என சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலினால் பிரகடனம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது மாளிகைக்காடு பிரதேசத்தில் தற்போது அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையைத் தடுப்பதற்காக சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பொறுப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் குறித்து பொறுப்பாளர் சபையின் செயலாளர் ஐ.எல்.எம்.மன்சூரினால் பிரகடன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் செய்பவர்களின் இல்லங்களில் நடைபெறும் திருமணம், ஜனாஸா கடமைகளுக்கு எமது பள்ளிவாசல்களினால் எவ்வித ஒத்துழைப்பும் வழங்கப்பட மாட்டாது, முஸ்லிம் ஜமாஅத்தினர்களின் மையத்துக்கள் அடக்கம் செய்யப்படும் மையவாடிகளில் இவர்களது ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட மாட்டாது, போதைப்பொருளுடன் தொடர்புடையவர்களின் பெயர், விபரங்கள் வீதிகள் தோறும் மற்றும் பள்ளிவாசல்களின் விளம்பரப் பலகைகளிலும் காட்சிப்படுத்தப்படும், போதைப் பொருள் வியாபாரிகள் மற்றும் பாவனையாளர்களின் விபரங்களை உயர திகாரிகளிடம் தெரியப்படுத்தி, மிக உச்சபட்ச தண்டனை கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும், போதைப் பொருள் பாவனையாளர் மற்றும் வியாபாரிகளின் மஹல்லா உரிமை இரத்துச் செய்யப்படும், போதைப் பொருட்களை விற்பனை செய்பவர் வெளியூரைச் சேர்ந்தவர் எனில், உடனடியாக அவர் ஊரை விட்டும் வெளியேற்றப்படுவார்.

எனவே, மேற்படி விடயங்களைக் கருத்தில் கொண்டு மிகவும் பொறுப்புடன் நடந்து, எமது ஊருக்கும் இளம் சந்ததியினருக்கும் பேருதவி செய்யுமாறு அனைவரையும் மிகவும் அன்புடனும் கௌரவத்துடனும் கேட்டுக் கொள்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்.எஸ்.எம்.ஸாகிர்

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி திருமலையில் ஆர்ப்பாட்டம்

ரொட்டவெவ குறூப் நிருபர்

அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய், பயங்கரவாதச் தடைச் சட்டதை நீக்கு, இராணுவ மயமாக்கலை நிறுத்து, திட்டமிட்ட காணி அபகரிப்புக்களை நிறுத்து போன்ற கோரிக்கைகள் முன்வைத்து திருகோணமலையில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை கடற்கரைக்கு முன்பாக அமைந்துள்ள காந்தி சுற்றுவட்டத்திற்கு முன்பாக நேற்று (18) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்குக் கிழக்கு மக்கள் போராட்டத் துக்கான ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் இடம்பெற்றது.

இதேவேளை நாடளாவிய ரீதியில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் குறித்த போராட்டமானது திருகோணமலையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் வயோதிபர் படுகாயம்

ரொட்டவெவ குறூப் நிருபர்

வயல் காவலுக்குச் சென்ற வயோதிபர் மிருகங்களுக்கு கட்டப்பட்டிருந்த கட்டுத் துவக்கில் சிக்கி அது வெடித்ததில் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வனர்த்தம் நேற்று முன்தினம் 6.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதன் போது கோமரங்கடவல தல்கஸ்வெவ பகுதியில் வசித்து வரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான எம்.ஜீ. நந்தசேன (70 வயது) என பொலிசார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்து நேற்று முன்தினம் மாலை 5.00 மணி அளவில் வயலுக்கு, பக்கத்து வயல்காரருடன் சென்று கொண்டிருந்தபோது. மிருகங்களுக்கு வைக்கப்பட்டிருந்த வெடி வெடித்த நிலையில் படுகாயமடைந்து கோமரங்கடவல பிரவேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் குறிக்க வயோதிபரின் வலது கால் மற்றும் கைகள் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் கோமரங்கடவல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தோப்பூர் உள்ளக்குள அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயம்

தோப்பூர் குறூப் நிருபர்

தோப்பூர் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட உள்ளக்குள அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயத்தில் உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்குள புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டு 15 வருடங்கள் கூட நிறைவடையாத நிலையில் இக்குளத்தில் அணைக்கட்டு பகுதி பகுதியாக சேதமடைந்துள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இக்குளத்தினை நம்பி பெரும் போகத்தில் 580 ஏக்கர் பரப்பிலும் சிறுபோகத்தில் 110 ஏக்கருக்கு அதிகமாகும் வேளாண்மை செய்கை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ச்சியாக சில நாட்கள் மழை பெய்தால் குளம் உடைப்பெடுக்கும் நிலையிலுள்ளதால் அவசரமாக இக்குளத்தினை புனரமைத்துத் தருமாறு இப்பிரதேச விவசாயிகள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பில் ஆறுமுகநாவலர் பெருமானின் 200ஆவது ஜனனதின விழா

கல்லடி குறூப் நிருபர்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் கிழக்கிலங்கை இந்து சமய கலாசார மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் தமிழிற்கும் சைவ சமயத்திற்கும் பாரிய தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 200ஆவது ஜனனதின விழா நேற்று மட்டக்களப்பு, கல்லடி துளசி மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு ராமகிருஷ்ணமிஷன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாஜீ மஹராஜ் மற்றும் மட்டக்களப்பு செங்கலடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு ஈசான சிவாச்சாரியார், சிவஸ்ரீ.சின்னையா கிருபாகர குருக்கள் ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்ற நிகழ்வினை கிழக்கிலங்கை இந்து சமய கலாசார மேம்பாட்டு நிறுவனத்தின் பொதுச் செயலாளரும்

சைவப்புலவரும், சோதிடருமான சிவஸ்ரீ.சி.சிவராஜா தலைமையில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

கல்லடி மணிக்கூட்டு கோபுரம் முன்பாக அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் திருவுருவத்தை ஏந்திய ஆன்மீக எழுச்சி ஊர்வலம் மட்டக்களப்பு புதிய கல்முனை வீதி வழியாக கல்லடி துளசி மண்டபத்தை வந்தடைந்ததும் பிரதான நிகழ்வுகள் ஆரம்பமாகின.

கிழக்கு ஆளுநர் பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு விஜயம்

பாலமுனை விசேட நிருபர்

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கு வெள்ளிக்கிழமை (16) விஜயம் செய்தார்.

வைத்தியசாலையில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் வைத்திய அத்தியட்சகரிடம் கேட்டறிந்த கிழக்கு மாகாண ஆளுநர், சீன அரசின் நிதியுதவியில் அவ்வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும், சகல வசதிகளையும் கொண்ட மூன்று மாடிக் கட்டடத்தினையும் பார்வையிட்டார்.

கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அதனை விரைவில் நிவர்த்தி செய்து தருமாறும் வைத்திய அத்தியட்சகர் ஏ.பி.மசூத் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்ததற்கிணங்க, அதன் பணிகளை முன்னெடுத்து நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஆளுநர் உறுதியளித்தார்.

காரைதீவு சுயேச்சை குழு உறுப்பினர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசில் இணைவு

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

அம்பாரை மாவட்டம் காரைதீவு பிரதேச சபை சுயேட்சை குழு (தோடம்பழ உறுப்பினர்) ஏ.ஆர். முஹம்மட் பஸ்மீர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசில் நேற்று முன்தினம் (17) இணைந்து கொண்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அம்பாரை மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் கட்சி தலைவர் முன்னிலையில் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டார்.

இதன் போது கல்முனை மாநகர பிரதி முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளருமான ரஹ்மத் மன்சூர் கட்சியின் அம்பாரை மாவட்ட குழுச் செயலாளர் ஏ.சி.சமால்டீன் உட்பட இணைப்புச் செயலாளர் எம்.எம். றெஜிமீர் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

காரைதீவில் ஆறுமுகநாவலரின் குரு பூஜையும் விழாவும்

காரைதீவு குறூப் நிருபர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 200ஆவது அகவை நிறைவினை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடாத்தும் குரு பூஜையும் விழாவும் நேற்று (18) ஞாயிற்றுக்கிழமை காரைதீவில் சிறப்பாக நடைபெற்றது.

ஞாயிற்றுக்கிழமை காலை சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்தில் இந் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் நடைபெற்றது.

காலையில் கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து ஆறுமுக நாவலரின் அழகிய ரத ஊர்வலம் நடைபெற்றது.

முத்துமீரானின் 'வெட்டுக்குத்துக்காலம்' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு

நிந்தவூர் குறூப் நிருபர்

சிரேஷ்ட சட்டத்தரணியும்,நாடறிந்த எழுத்தாளரும், இலக்கிய வேந்தருமான கலாபூஷணம் எஸ். முத்துமீரானின் "வெட்டுக்குத்துக்காலம்" கவிதைத் தொகுப்பு நூலானது நேற்று முன்தினம் (17) நிந்தவூர் பிரதேச சபையின் கூட்ட மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடான இந்த கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டை, நிந்தவூர் கலை இலக்கியப் பேரவை வெளியிட்டு வைத்தது.

நிந்தவூர் கலை, இலக்கியப் பேரவையின் தலைவர் டாக்டர். ஏ.எம். ஜாபீர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், நூலாசிரியர் கலாபூஷணம், இலக்கிய வேந்தர் சட்டத்தரணி எஸ். முத்துமீரான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன்போது நூலின் முதற் பிரதியை ஹபீப் வங்கியின் முகாமையாளரும், நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைப் பொருளாளருமான ஏ.எல். அன்வர் டீன் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இதேவேளை கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகளை நூலுருவாக்கம் செய்யும், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்மாதிரி செயற்திட்டத்தின் கீழ், இந்த நூல் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிண்ணியா தள வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு

கிண்ணியா தினகரன் நிருபர்

கிண்ணியா தள வைத்தியசாலைக்கு ஒரு தொகை மருந்துப் பொருட்களை சமூகத் தீர்மானத்திற்கான பெண்கள் அமைப்பின் தலைவியும் ஐக்கிய தேசியக் கட்சியின் மூதூர் தொகுதி அமைப்பாளருமான ரோஹினா மஹரூப் சனிக்கிழமை (17) வழங்கி வைத்தார்.

கனடாவிலுள்ள சிவில் அமைப்புக்கள் ரோஹினா மஹரூபின் வேண்டுகோளுக்கிணங்க இதனை வழங்கியுள்ளனர். நாட்டில் மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதைக் கருத்திற் கொண்டு ஒரு கோடிக்கு மேலான இம் மருந்துப் பொருட்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன. அதன் ஒரு பகுதியாக கிண்ணியா தள வைத்தியசாலைக்கு ஒரு தொகை மருந்துப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இது தவிர தோப்பூர், தம்பலகாமம் வைத்தியசாலைகளுக்கும் இவ்வாறான மருந்துப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

வடக்கின் உதயம்

யாழ்ப்பாணத்தில் மார்கழி இசைவிழா 27 இல் ஆரம்பம்

(சாவகச்சேரி விஷேட நிருபர்)

யாழ் இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் மற்றும் யாழ்ப்பாணம் வணிகர் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் மார்கழி இசைவிழா எதிர் வரும் டிசம்பர் 27 ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் பல் கலைக்கழகத்தின் கைலாசபதி கலை யரங்கில் இடம்பெறவுள்ளது. குறித்த நாட்களில் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை விழா இடம்பெறும் என விழா ஏற்பாட்டுக்குழு தெரிவித் துள்ளது.

யாழ் வணிகர் கழகத்தில் கடந்த சனிக்கிழமை(17) நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பிலேயே ஏற் பாட்டாளர்கள்குழு இதனை தெரி வித்தனர்.இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் உற்பத்தியாளர்களுடைய கண்காட்சியும் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிற்கு அண்மை யில் உள்ள மண்டபத்தில் இதன்போது இடம்பெறவுள்ளது.

உள்ளூரிலே காணப்படுகின்ற கலைஞர்களது திறமைகளையும் அவர்களுடைய கலைத்திறனையும் வெளிக்கொணர்வதற்காகவே குறித்த நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள் ளன. நிகழ்வுகளில் இலங்கை கலை ஞர்கள் மட்டுமின்றி இந்திய கலை ஞர்களும் இணைந்து தங்களுடைய கலைத்திறனை வெளிப்படுத்த உள்ள னர். குறித்த நிகழ்விற்கு பொதுமக்க ளுக்கு எந்த வித கட்டணங்களும் வசூ லிக்கப்படப்பட மாட்டாது. இலவசமாக பார்வையிட முடியும். மேலும் நிகழ்வு களை யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிப ரப்பாகும் தொலைக்காட்சிகள் ஊடாக மக்கள் நேரலையாக வீட்டில் இருந்தும் காணக்கூடிய வசதிகள் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளன" என்றனர்.

அனைவரும் இதயசுத்தியுடன் செயலாற்றினால் தேசியப்பிரச்சினை தீர்வுக்கு இணக்கம் ஏற்படும்

வடக்கு, கிழக்கு அபிவிருத்தியை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதியிடம் அங்கஜன் இராமநாதன் எம்.பி வேண்டுகோள்

(சாவகச்சேரி விஷேட நிருபர்)

தற்போது ஜனாதிபதியால் முன் னெடுக்கப்பட்டுள்ள நல்லிணக்கத் திட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த யுத்த காலங் களில் காணப்பட்ட அபிவிருத்தி தேக்கம் நீக்கப்பட்டு அம்மாகாணங் களில் அபிவிருத்தி துரிதப்படுத்தப் படுவது உள்ளடக்கப்பட வேண்டு மென பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநா தன் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவ கச்சேரியில் இடம்பெற்ற நிகழ் வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கை யில், ஜனாதிபதியின் ஏற்பாட் டில் அண்மையில் இடம் பெற்ற சர்வகட்சி மாநாட்டில் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்பாக தீர்வு ஒன்றை வழங்க ஜனாதிபதி விருப்பம் தெரிவித்திருந் தார். ஜனாதிபதி விரும்பினாலும் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்பாக தீர்வு கிடைக்க சந்தர்ப்பம் இல்லை. ஆனால் பல விடயங்களில் இணக் கப்பாடு வரக்கூடிய நிலை ஒன்று காணப்படுகின்றது.

எமது பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதனை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மற்றும் காணிப் பிரச்சனை கள் உள்ளிட்ட பல பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனக் குறித்த சந்திப் பில் வலியுறுத்தப் பட்டது.

இவற்றுக்கு மேலாக நான் ஜனா திபதியிடம் கேட்டது என்னவென் றால் 35வருட கால உள்நாட்டு யுத் தத்தால் நாம் பல விடயங்களை இழந்து விட்டோம். கல்வி, விவசா யம், கடற்தொழில் என அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சி கண்டுள் ளோம்.

நல்லிணக்கம் என்ற அடிப்ப டையில் முதலில் இந்தப் பிரச்சி னைகளுக்கு தீர்வு கண்டு ஏனைய மாகாணங்களுக்கு சரி சமமாக எமது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்க ளும் அபிவிருத்தியில் வளர்ச்சி காண வேண்டும்.

எனவே நல்லிணக்கத் திட்டத் தில் அபிவிருத்தி இடைவெளி களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருந்தேன்.

இதன்போது ஜனாதிபதி இந்த வேலைத்திட்டத்தில் இணக்கப்பாடு ஏற்பட்டு இருப்பதாகவும்ஜனவரி மாதம் 13 ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி முன் னோக்கிப் பயணிப்பதற்கான நடவ டிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும், பெப்ரவரி மாதம் பொருளாதாரம் சம்பந்தமாக சர்வ கட்சித் தலைவர்க ளுடன் சந்திப்பு ஒன்று இடம்பெறவி ருப்பதாகவும் கூறியிருந்தார்.

எனவே அனைவரும் இதயசுத் தியுடனும்நேர்மையாகவும் செய லாற்றும் பட்சத்தில் பெப்ரவரி 4ம் திகதிக்கு முன்பாக ஓர் இணக்கப்பாட் டிற்கு வர முடியும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த விலைக்கேள்விகள் தொடர்பாக பின்வரும் தகைமைகளைக்கொண்ட விலைக்கேள்வியாளர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியுமாக இருப்பதுடன், அக்குறித்த விலைக்கேள்வியுடன் உரிய ஆவணங்கள் சமர்ப்பிப்பதன் மூலம் தமது தகைமைகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

விலைக்கேள்வியாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது:

(அ) இலங்கையில் வியாபார பெயர்கள் பதிவுக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனி அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக இருத்தல்

(ஆ) விலைக்கேள்வியாளரால் இதேபோன்ற ஒத்த சேவையொன்று இக்குறித்த விலைக்கேள்விக்கு விண்ணப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியாகும்போது திருப்திகரமானதான முறையில், கடந்த அடுத்துப்பின் (02) வருட காலத்துக்குள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியதுடன், அதன் பெறுமதி மாதமொன்றுக்கு ரூபா 5,000,000.00 அல்லது அதற்கு மேற்பட்ட அளவாக அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) இக்குறித்த விலைக்கேள்வியின் விலைக்கேள்வியாளருக்குச் சொந்தமான பதவியணி குறைந்தபட்சம் 100 பேர்களைக் கொண்ட அனுபவம் வாய்ந்த குழுவாக இருக்க வேண்டியதுடன், இந்த விலைக்கேள்வி தொடர்பில் விண்ணப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியாகும்போது கடந்த அடுத்துப்பின் (02) வருட காலத்துக்குள், காலம் பூராகவும் அக்கம்பனியினால் சுத்திகரிப்பு வேலைகள் இற்றை வரை தொடர்ந்தும் நிறைவேற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், இரு விலைக்கேள்விகளுக்கு (02) மேற்பட்ட சுகாதார ஒப்பந்த அளவுகள் ஒரு ஒப்பந்ததாரருக்கு எக்காரணம் கொண்டும் வழங்கப்பட மாட்டாது.

விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்புகள் திருப்பிச் செலுத்தப்படாத ரூபா முப்பதாயிரம் (ரூபா 30,000.00ஆன) காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன் அதற்காக விலைக்கேள்வியாளரினால் எழுத்து மூலமான கோரிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் மூலம் 2022.12.20 ஆந் திகதி முதல் 2023.01.10 ஆந் திகதி வரை வேலைசெய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவையேற்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல்தொடர் முகாமைத்துவ கிளை அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும் விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும். வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் மூலம் வெளியிடப்படுகின்ற விலைக்கேள்வி படிவத்தின் மூலம் மாத்திரம் இக்குறித்த விலைக்கேள்விக்காக விண்ணபிக்க முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2023.01.11 ஆந் திகதி புதன் பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர் அதிகாரம் வழங்கிய பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசாங்க மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா மூன்று மில்லியன் (ரூபா. 3,000,000.00 ஆன) பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

விலைக்கேள்வியுடன் தொடர்புடைய விபரங்களைத் தெளிவுபடுத்தல்கள் 2023.01.03 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் முகாமைத்துவ கிளைத்தலைவர் கேட்போர் கூடத்தில் நடைபெறுவதுடன் அதற்குப் பின்னர் வேலைத்தளத்தில் கள பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின்இதொலைபேசி இலக்கம். 011-2264103/011-2264117 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

தவிசாளர்,
வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (தனியார்) (இலங்கை) கம்பனி,
பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,
கட்டுநாயக்க.

பெறுகை அறிவித்தல்

போதனா வைத்தியசாலை - அநுராதபுரம்

ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான அழைப்பு

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிராந்தியப் பெறுகைக்குழுவின் தலைவரினால் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை நிர்மாணிப்பு மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பதிவுசெய்யப்பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023ஆம் ஆண்டில் இவ் வைத்தியசாலையின் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக 2022 டிசம்பர் 19 முதல் 2023 சனவரி 02 அன்று மு.ப.10.00 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. அதன் பிரகாரம், 2023.01.01 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.30 முதல் பி.ப.03.00 இற்குற்பட்ட காலத்தில் விபரக்குறிப்புகளுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களை இவ் வைத்தியசாலையின் பிரதான அலுவலக்தில் பெற்றுக்கொள்ளலாம். அதற்காக, எழுத்துருவ விண்ணப்பமொன்றுடன் தம் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்து, உரிய கட்டணங்களைச் செலுத்தி வைத்தியசாலையின் சிறாப்பரிடம் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தொடர் இலக்கம்	விபரம்	தகவுத் திறன்கள்	விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூபா
01	2023 ஆம் ஆண்டில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்	C9 அல்லது அதற்கு மேல்	2,500.00

மேலதிக விபரங்களிற்காக தயவுசெய்து 025-2222261 - 107 / 113 ஐ அழைக்கவும்.

அலுவலக நேரங்களில் இலவசமாக பதிவுக்கான படிவங்களை பரிசீலனை செய்து கொள்ளலாம். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

தலைவர்
பிராந்திய பெறுகைக்குழு,
போதனா வைத்தியசாலை,
அநுராதபுரம்.

விலைமனுக்கோரல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

விலைக்கேள்வி இலக்கம் : 077/T/2022

யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் பதவியணியினருக்காக தங்குமிடம் அமைத்தல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி சார்பில், இலக்கம் 01 பெறுகைக்குழுவின் தவிசாளரால் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்திற்காக முன்மொழியப்பட்ட பதவியணி தங்குமிடம் கீழே காட்டப்பட்டுள்ளவாறு அமைப்பதற்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைக்கேள்விகள், தகைமைப்பெற்ற விலைக்கேள்வியாளர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன.

இவ் வேலைப்பகுதிக்குள் உள்ளடங்கப்படுவது, சீமேந்துக் கற்களால் ஆக்கப்பெற்ற சுவர் கொண்ட கட்டிடமொன்று/ வதிவிடம் மற்றும் கூரையை உள்ளடங்கலாக, மலசலகூடங்களைக் கொண்ட மின் மற்றும் இயந்திர வேலைகளுடன் (நிலப்பரப்பு அண்ணளவாக 500 சதுர மீட்டர் கொண்டதாக) கட்டமைப்பதாகும். அவ் அனைத்து கட்டுமானங்களுக்குத் தேவைப்படுகின்ற கட்டிடப்பொருட்கள் மற்றும் தொழிற்படை வழங்கி, விவரக்குறிப்பீட்டில் உள்ளவாறும், விலைப்பட்டியல் மற்றும் வரைபடங்களுக்கமைவாகவும் மற்றும் உரிய பொறியியல் திட்டவரைப்படங்களுக்கமைய கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

கருத்திட்ட அமைவிடம் : யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில்

கட்டுமானவேலைகளுக்குரிய கால எல்லை 180 நாட்களாகும்.

தேசிய போட்டியிடல் விலைக்கேள்வி நடவடிக்கை முறைகளுக்கமைவாகவே, விலைக்கேள்விகள் இடம்பெறும்.

இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக அமையப் பெறுதல் வேண்டும். மேலும் இந்த விலைக்கூறுநர்கள் கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA), (இதற்கு முன்னர், நிர்மாணப் பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பேரில் அழைக்கப்பட்ட), C2 தரத்தில் அல்லது C3; (கட்டிடங்கள் கட்டுமானம் தொடர்பாக) பதிவுசெய்யப்பட்ட, குறித்த வகையிலான கட்டுமானப் பணிகள் தொடர்பான அனுபவமுள்ள ஒப்பந்த தாரராக இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு, 2022.12.20 முதல் 2023.01.17 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், கிளைத் தலைவர் - வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவுக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்று சமர்ப்பிப்பதன் மூலம் மற்றும் விலைக்கேள்வி ஆவணங்கள் தொடர்பாக திருப்பி தரப்படாத ரூபா 28,000/- (இருபத்தெட்டாயிரம் ரூபா) மாத்திரம் காசாகச் செலுத்தி, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட குறித்த பூர்த்திசெய்யப்பட்ட விலைக்கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்துகொள்ள முடியும். இந்த கொடுக்கல் வாங்கல்கள் காசு மூலம் இடம்பெற வேண்டும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக சகல விலைக்கேள்வியாளர்களும், குறித்த ஒரு விலைக்கேள்விக்காக ரூபா பதினாறு இலட்சம் மாத்திரம் (ரூபா. 1,600,000/-) பணமாக அல்லது விலைக்கேள்வி தகவல் அட்டவணையில் விலைக்கேள்வி தரவுகள் மற்றும் ஒப்பந்த தகவல்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி பிணைமுறியுடன் குறித்த விலைக்கேள்வியினை சமர்ப்பித்தல் வேண்டும்.

2023.01.05 ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனையக் கட்டிடத்தில் நடைபெறும் ஆரம்ப விலைக்கேள்வி தொடர்பான கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு, அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கும் மற்றும் அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகளுக்கும் இத்துடன் அழைப்பு விடுக்கின்றேன்.

சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்விகள் பிரதியுடன் 2023.01.18 ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாக சமுகமளித்து அல்லது பதிவுத் தபால் மூலம் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், இலக்கம் 01, பெறுகைக் குழுவின் தவிசாளர் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் குறித்த நேரத்தில் விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிவடைந்ததும், விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரப் பூர்வமான பிரதிநிதிகள் முன்னிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறந்து வைக்கப்படும்.

இக் காரணம் தொடர்பில் ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்களுக்கு, மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவின், கிளைத் தலைவர் மூலம் 011-226-3500/3506/3530 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் ஊடாக அல்லது தொலைநகல் இலக்கம் 011-2251356 மூலம் அறிந்து கொள்ள முடியும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் இந்த விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்புகள் பரிசோதிப்பதற்காக வாய்ப்பு வழங்கப்படுவதுடன், 2022.12.20 ஆந் திகதி முதல் 2023.01.17 ஆந் திகதி வரை வாரத்தில் வேலைசெய்யும் நாட்களில் ஏதேனுமொரு தினத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் பார்வையிட முடியும்.

தவிசாளர்,
இலக்கம் 01, பெறுகைக் குழு,
வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு,
வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,
பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க

SriLankan Airlines oneworld

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு
ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கை

கொள்வனவு இலக்கம் : ENG/ALC/RFP/22/030-1 & ENG/ALC/RFP/22/030-2

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் லிமிடெட் நிறுவனத்தினால் ஐந்து (5) குறுகிய பருமன் மற்றும் ஐந்து (5) அகலமான பருமனைக் கொண்ட விமானங்களை இயக்கும் குத்தகை முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (எஸ்எல்ஏ)

துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையியல் கொள்முதல் குழுவின் தலைவரால், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் சார்பாக, 2022 டிசெம்பர் 19 ஆம் திகதி முதல் அந்தந்த 'முன்மொழிவுக்கான கோரிக்கை (ஆர்.எ.ஃப்.பி)' இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, தகுதியான மற்றும் தகுதிவாய்ந்த ஏலதாரர்களிடமிருந்து பொருத்தமான விமானங்களை இயக்குவதற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக ஏலங்கள் கோரப்படுகின்றன. 'முன்மொழிவுக்கான கோரிக்கை (ஆர்.எ.ஃப்.பி)' தொடர்பான விடயங்கள் இலங்கை விமான நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் (**https://www.srilankan.com/en_uk/corporate/tender-notices**) காணப்படுகின்றன.

சர்வதேச போட்டி ஏல (ஐசிபி) கொள்வனவு முறையினூடாக இலங்கை அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டல்களுக்கமைய ஏலச் செயற்பாடு நடாத்தப்படும். சாத்தியமான விமானத்தை குத்தகைக்கு விடுவதற்காக சட்டபூர்வ உரிமைகளைக் கொண்ட அனைத்து ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த ஏலதாரர்களும், ஆர்.எ.ஃப்.பி. குறியீடான (ENG/ALC/RFP/22/030-1 அல்லது ENG/ALC/RFP/22/030-2) என்பதைக் குறிப்பிட்டு 2023 ஜனவரி 30 ஆம் திகதி இலங்கை நேரம் (GMT + 0530) 1400 மணிக்கு முன்பதாக **asset@srilankan.com** எனும் பாதுகாப்பான மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்வதன்மூலம் தங்கள் ஏலங்களைச் சமர்ப்பிக்கலாம்.

ஏலங்கள் தகுதியுள்ளதாகக் கருதப்படுவதற்கு அவை பின்வரும் தேவையான ஆவணங்களைக் கொண்டிருக்க வேண்டும்.
- ஏலதாரரின் சுயவிபரம்
- ஏலதாரருக்கு விமானத்தை குத்தகைக்கு விடுவதற்கான ஏலத்தை சமர்ப்பிக்க விமானத்தின் உரிமையாளரிடமிருந்து அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் ஏலதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் எஸ்.எல்.ஏ உடன் குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திட உரிமையாளர் ஒப்புக்கொள்கிறார் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- விமானத்தின் தற்போதைய நிதி ஏற்பாடுகள் / அடமானம் / உரிமங்கள் தொடர்பான தகவல்கள் (விமானம் அடமானத்தின் கீழ் உள்ளதா போன்றவை)

ஆர்.எ.ஃப்.பி. யுடன் இணைக்கப்பட்டுள்ள ஏல ஒப்புகைப் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு, முறையாக கையொப்பமிடப்பட்டு **praneeth.alwis@srilankan.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு பிரதியிடப்பட்டு **umega.seneviratne@srilankan.com** எனும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். ஆர்.எ.ஃப்.பி. பற்றிய ஏதேனும் விசாரணைகள் அல்லது தெளிவுபடுத்தல்களை 2023 ஜனவரி 16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் **praneeth.alwis@srilankan.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு பிரதியிடுவதுடன் **umega.seneviratne@srilankan.com** எனும் முகவரியைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

உரிய ஆர்.எ.ஃப்.பி. உடன் பின்னிணைப்பு மூலம் குறிப்பிடப்படாவிட்டால், ஏலங்கள் 2023 ஜனவரி 30 திகதி அன்று இலங்கை நேரப்படி (GMT + 0530) பிற்பகல் 2.15 மணிக்கு இலங்கை விமான நிலையத்தினால் இலத்திரனியல் முறையில் திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும். ஏல திறப்பு விழாவில் பங்கேற்க விரும்பும் தரப்பினர் ஏல திறப்பு திகதிக்கு ஏழு (7) நாட்களுக்கு முன்னர் **praneeth.alwis@srilankan.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு பிரதியிடுவதுடன் **umega.seneviratne@srilankan.com** மின்னஞ்சல் செய்வதன் மூலம் தெரிவிக்க வேண்டும்.

ஆர்.எ.ஃப்.பி. தொடர்பாக ஏதேனும் திருத்தங்கள் / அறிவித்தல்கள் எஸ்எல்ஏ இன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் காணப்படுகின்றன.

தலைவர்
அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு
துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு
இலக்கம் 19, சைத்திய வீதி, கொழும்பு 01, இலங்கை.

விலைமனுக்கோரல்

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

விலைக்கேள்வி இலக்கம் : 051/T/2022

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வருகைதரும் முனையம் மற்றும் சுற்றுப்புற இடங்களில் சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் வழங்குதல்

(PROVISION OF JANITORIAL & CLEANING SERVICES FOR ARRIVAL TERMINAL & ITS PRECINCTS AT THE BANDARANAIKE INTERNATIONAL AIRPORT KATUNAYAKE)

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வருகைத்தரும் முனையம் மற்றும் சுற்றுப்புற இடங்களில் சுகாதாரம் மற்றும் சேவைகள் சுத்திகரிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு வருட காலத்துக்கு வழங்குவதற்காக நிறுவனங்களிடமிருந்து இத்துடன் விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

இந்த விலைக்கேள்விகள் தொடர்பாக பின்வரும் தகைமைகளைக்கொண்ட விலைக்கேள்வியாளர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியுமாக இருப்பதுடன், அக்குறித்த விலைக்கேள்வியுடன் உரிய ஆவணங்கள் சமர்ப்பிப்பதன் மூலம் தமது தகைமைகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

விலைக்கேள்வியாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது

(அ) இலங்கையில் வியாபார பெயர்கள் பதிவுக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவு கம்பனி அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக இருத்தல்

(ஆ) விலைக்கேள்வியாளரால் இதேபோன்ற ஒத்த சேவையொன்று இக்குறித்த விலைக்கேள்விக்கு விண்ணப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியாகும்போது திருப்திகரமானதான முறையில், கடந்த மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியதுடன், அதன் அடுத்துப்பின் (02) வருட காலத்துக்குள் பெறுமதி மாதமொன்றுக்கு ரூபா 6,000,000.00 அல்லது அதற்கு மேற்பட்ட அளவாக அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) இக்குறித்த விலைக்கேள்வியின் சொந்தமான விலைக்கேள்வியாளருக்குச் சொந்தமான பதவியணி குறைந்தபட்சம் 165 பேர்களைக் கொண்ட அனுபவம் வாய்ந்த குழுவாக இருக்க வேண்டியதுடன், இந்த விலைக்கேள்வி தொடர்பில் விண்ணப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியாகும்போது கடந்த அடுத்துப்பின் (02) வருட காலத்துக்குள், காலம் பூராகவும் அக்கம்பனியினால் சுத்திகரிப்பு வேலைகள் இற்றை வரை தொடர்ந்தும் நிறைவேற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், இரு விலைக்கேள்விகளுக்கு (02) மேற்பட்ட சுகாதார ஒப்பந்த அளவுகள் ஒரு ஒப்பந்ததாரருக்கு எக்காரணம் கொண்டும் வழங்கப்பட மாட்டாது.

விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்புகள் திருப்பிச் செலுத்தப்படாத ரூபா முப்பத்தைந்தாயிரம் (ரூபா 35,000.00 ஆன) காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன் அதற்காக விலைக்கேள்வியாளரினால் எழுத்து மூலமான கோரிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவின் மூலம் 2022.12.20 ஆந் திகதி முதல் 2023.01.10 ஆந் திகதி வரை வேலைசெய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவையேற்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல்தொடர் முகாமைத்துவ கிளை அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட விமானசேவைகள் முடியும். வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் (இலங்கை) (தனியார்) கம்பனியின் மூலம் வெளியிடப்படுகின்ற விலைக்கேள்வி படிவத்தின் மூலம் மாத்திரம் இக்குறித்த விலைக்கேள்விக்காக விண்ணபிக்க முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2023.01.11 ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர் அதிகாரம் வழங்கிய பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசாங்க மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியிற்கு தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா மூன்று மில்லியன் (ரூபா.3,000,000.00) பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

விலைக்கேள்வியுடன் தொடர்புடைய விபரங்களைத் தெளிவுபடுத்தல்கள் 2023.01.03ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) தனியார் கம்பனியின் முகாமைத்துவ கிளைத்தலைவர் கேட்போர் கூடத்தில் நடைப்பெறுவதுடன் அதற்குப் பின்னர் வேலைத்தளத்தில் கள பரிசோதனை மேற்கொள்ளப்படும்

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கம். 011-2264103 / 011-2264117 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

தவிசாளர்,
வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (லங்கை) (தனியார்) கம்பனி,
பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

இலங்கைச் சுங்கம்

இலங்கை சுங்கத்திற்கு கலப்பினகாரர்கள் 9ஐ செயற்பாட்டு நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான பெறுகை அழைத்தல் தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB)

இலங்கை சுங்கத்திற்கு செயற்பாட்டு நீண்டகால குத்தகை அடிப்படையில் கலப்பின கார்கள் 09ஐப் பெற்றுக்கொள்வதற்காக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சார்பாக, திணைக்களப் பெறுகைக் குழுத்தலைவரினால் (பாரிய பெறுகை) தகைமைகளைப் பெற்றுள்ள கேள்விதாரர்களிடமிருந்து (குத்தகைக்காரர் குறைந்தபட்சம் 10 வாகனங்கள் கொண்ட தொகுதி ஒன்றுடன் இலங்கையிலுள்ள வாகனங்களின் வர்த்தக நாமங்களின் பட்டயம் பெற்ற வாகன முகவர்கள் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவுசெய்யப்பெற்றுள்ள நிதி நிறுவனங்கள் மற்றும் வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்கும் கம்பனிகள் முத்திரையிடப்பட கேள்விகள் கோரப்படுகின்றன.

ஒப்பந்த இலக்கம்	பெறுகையின் பெயர்	உச்ச மாத வாடகை ரூபா	கேள்வி மூடுதல்	
			திகதி	நேரம்
Log/Tr/01/Rent Vehicle (Car) 2022	செடான் கலப்பினம் கார்கள் 09 என்ஜின் கொள்ளளவு 1600 CC இற்கு மேற்படாத	200,000.00	2023.01.16	பி.ப.2.00

01. கேள்வி கோரலானது, தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரும் முறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
02. இதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை, சுங்கப்பணிப்பாளர் (சேவைகள் மற்றும் வழங்கல்) இடம் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், 2022.12.19 முதல் 2023.01.02 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை பின்வரும் முகவரியில் கேள்விப்படிவங்களை பரிசீலனை செய்து கொள்ளலாம்.
03. இதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், 2023.01.02 அன்று அல்லது அதற்கு முன்னர் வார வேலை நாட்களில் மு.ப.9.00 ம் பி.ப.3.00 இற்குமிடைப்பட்ட நேரத்தில் ரூபா 5,000.00 இற்கான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி, இலங்கை சுங்கத்தின் 06ஆம் மாடியிலமைந்துள்ள சேவைகள் மற்றும் வழங்கல் பிரிவில் எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து முழுமையான கேள்விப் படிவத்தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்து கொள்ளலாம். கட்டணங்கள் காசாக மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.
04. பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் 2023.01.16 அன்று பி.ப.2.00 இற்கு அல்லது அதற்கு முன்னர், இலங்கை சுங்கத்தின் 06ஆம் மாடியிலமைந்துள்ள சேவைகள் மற்றும் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் முடியுமென்பதுடன் அவற்றை தாங்கிவரும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில், "இலங்கை சுங்கத்திற்கு செயற்பாட்டு நீண்ட கால குத்தகை அடிப்படையில் கார்களை பெற்றுக்கொள்வதற்கான கேள்விகோரல்" எனத் தெளிவாக குறிப்பிட்டு, "தலைவர், பெறுகைக்குழு, சுங்க இல்லம், இல.40, பிரதான வீதி, கொழும்பு - 11 என்ற முகவரிக்கு 2023.01.16 அன்று குறித்த நேரத்தின் முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம். அனைத்து கேள்விகளும் சுங்கப்பணிப்பாளர் நாயகம் பெயரில் ரூபா 150,000.00 இற்கான கேள்விப் பிணையம் ஒன்றுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
05. அன்றைய தினம் கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் கேள்விகள் நிராகரிக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் சமுகமளித்தருக்கலாம்.
06. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் தொடர்பாக சுங்கப்பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும்.

தலைவர்
திணைக்களப் பெறுகைக்குழு,
இலங்கை சுங்கம், இல.40, பிரதான வீதி,
கொழும்பு - 11

கமத்தொழில் அமைச்சு
வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி
கேள்விகோரல் அழைப்பு

அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இலங்கை அரசிற்கும் உரித்தான இரண்டு உரக்கம்பனிகளையும் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக்கம்பனிகளை கூட்டிணைத்து தனி நிறுவனமொன்றாக நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான தேவைப்பாடுகளை பூரணப்படுத்துவதற்காக, மனித வளங்கள் முகாமைத்துவத் திட்டம் (HRM PLAN) வியாபாரத் திட்டம் (Business Plan) சந்தைப்படுத்தல் திட்டம் (Marketing Plan) என்பவற்றுடன் கூடிய கூட்டாண்மை திட்டமிடல் (Corporate Plan) தகைமையுள்ள உசாத்துணையாளரொருவரின்/உசாத்துணை வழங்கல் நிறுவனமொன்றின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

ஆகவே வ/ப இலங்கை உரக்கம்பனி சார்பாக திணைக்களத்தின் உசாத்துணைகளைத் தேர்ந்தெடுக்கும் குழுவின் தலைவரினால், மனித வளங்கள் முகாமைத்துவ திட்டம்(HRM PLAN) வியாபாரத் திட்டம் (Business Plan) சந்தைப்படுத்தல் திட்டம் (Marketing Plane) ஆகியவற்றுடன் கூடிய கூட்டாண்மை திட்டமிடல் (Corporate Plan) தயாரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட உசாத்துணையாளர்களிடமிருந்து மற்றும் /உசாத்துணை வழங்கல் நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

தேசிய பெறுகை முகவராண்மை 2007 இல் வெளியிட்டுள்ள உசாத்துணையாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வழிகாட்டல் கைநூலில் விபரிக்கப்பட்டுள்ளவாறு, தரம் மற்றும் ஆகுசெலவு அடிப்படையிலான (Quality and Cost கீழ் உசாத்துணையாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்

2023 ஜனவரி 03ஆம் திகதி பி.ப.2.30 இற்கு வ/ப இலங்கை உரக்கம்பனியின் பெறுகைப் பிரிவில் இதற்கான விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

நிதியியல் முன்மொழிவுகள் (Finance Proposal) மற்றும் தொழில்நுட்ப முன்மொழிவுகள் (Technical Proposal) மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதி தனித்தனி உறைகளில் உள்ளிட்டு, மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதி எனத் தெளிவாகக் குறிப்பிட்டு இவ் இரண்டு பிரதிகளையும் ஒருறையில் உள்ளிட்டு 2023 ஜனவரி 13 அன்று பி.ப.பி.ப.2.30 இற்கு முன்னர் கீழ்க்காணப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும் அல்லது வத்தளை ஹுனுப்பிட்டிய சுவர்ணஜயந்தி மாவத்தையிலுள்ள வ/ப இலங்கை உரக்கம்பனியின் பிரதான அலுவலகப் பெறுகைப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள், தொழிற்றுறைசார் தகைமைகளை உறுதிப்படுத்தல்களிற்கான ஆவணங்கள் உட்பட அவசியமான ஏனைய ஆவணங்கள், இக்கருமத்திற்கான கால எல்லை, தொழில்நுட்ப முன்மொழிவுகள் இதற்காக உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். முழுமையான கருமத்திற்குமான செலவினம் இலங்கை நாணயத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

இதற்கான மேலதிகத் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக பதில் பொது முகாமையாளர் வ/ப இலங்கை உரக்கம்பனி, லக் பொஹர சுவர்ண ஜயந்தி மாவத்தை, ஹுனுப்பிட்டிய, வத்தளையை தொடர்புகொள்ளவும். (தொ.பே: 011-2947765/0772069777, தொலைநகல் - 0112930423

தலைவர்,
திணைக்கள உசாத்துணை தேர்ந்தெடுக்கும் குழு,
பெறுகைப்பிரிவு
லக்பொஹர சுவர்ணஜயந்தி மாவத்தை,
ஹுனுப்பிட்டிய, வத்தளை.

விலைமனுக்களுக்கான அழைத்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக (பிட்டிபன வளாகம்) தொழில்நுட்பவியல் பீடத்தில் சுத்திகரிப்பு மற்றும் சுகாதார சுத்திகரிப்பு மற்றும் திண்மக் கழிவை அகற்றல் ஆகியவற்றிற்கான ஏற்பாடு - 2023/2024

Contract No.: USJP/EIS/CL/FOT/2023/2024

01. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக (பிட்டிபன வளாகம்) தொழில்நுட்பவியல் பீடத்தில் சுத்திகரிப்பு மற்றும் சுகாதார சுத்திகரிப்பு மற்றும் திண்மக் கழிவை அகற்றல் ஆகியவற்றிற்கான ஏற்பாட்டிற்காக (2023/2024) தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
02. உத்தேசிக்கப்பட்ட சேவைக் காலப்பகுதியானது 365 நாட்களாகும்.
03. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
04. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 011-2802856 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக தாபனங்களுக்கான (தகவல் மற்றும் சேவைகள்) உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்று 2022 டிசம்பர் 16 ஆம் திகதியிலிருந்து 2023 சனவரி 5 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
05. 2022 டிசம்பர் 16 ஆம் திகதியிலிருந்து 2023 சனவரி 5 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக நான்காயிரத்து ஐந்நூறு ரூபாவை (4,500 ரூபா) செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
06. 2022 டிசம்பர் 28 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக நிருவாக கட்டிட நிருவாக சபை அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
07. 2023 சனவரி 09 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக நிருவாக கட்டிட நிருவாக சபை அறையில் விலைமனுக்கள் மூடப்படும்.
08. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம், விளக்கம் மற்றும் திறக்கும் திகதி ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும். 2023 சனவரி 9 ஆம் திகதியன்று கேள்வி மூடும் நேரமான பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக தகவல் மற்றும் சேவைகளுக்கான தாபனங்களின் உதவிப் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அல்லது மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள ''கேள்விப் பெட்டியில்'' சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான அனைத்து விலைமனுக்களும் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனுதாரருக்கு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். எந்தவொரு தாமதத்திற்கும் தபாலில் அனுப்பியதற்கான சான்றுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை சமர்ப்பிக்கும் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் (ஒவ்வொரு விலைமனுவிற்கும் ஒரு பிரதிநிதி) விலைமனுக்களை திறக்கும் வேளையில் பங்கு பெற்றலாம்.
09. இறுதி தீர்மானமானது திணைக்கள பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்படும்.
10. விலைமனுக்கள் 2023 மார்ச் 24 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் புகழ் வாய்ந்த வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக துணைவேந்தருக்கு முகவரியிடப்பட்டதுமானதும் 227,500 ரூபா பெறுமதியானதுமான விலைமனுப்பிணையொன்றுடன் ஒவ்வொரு விலைமனுவும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2023 ஏப்ரல் 21 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
12. தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குனரானவர் நாட்டில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள தொழிலாளர் சட்டவாக்கத்திற்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள முகவரிகள் பின்வருமாறு:
விலைமனுக்கோரல் ஆவணத்தை பரீட்சித்தல் விலைமனுக்கோரல் ஆவணத்திற்காக விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் மற்றும் விலைமனுக்கோரல் ஆவணத்தை ஒப்படைத்தல்.

உதவிப் பதிவாளர்,
தாபனங்கள் (தகவல் மற்றும் சேவைகள்) பிரிவு,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,
கங்கொடவில, நுகேகொட.

விலைமனுவை திறத்தலுக்கானது:
நிருவாக கட்டிடத்தின் நிருவாக சபை அறை,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,
கங்கொடவில, நுகேகொட.

தலைவர்/திணைக்கள பெறுகைக் குழு,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.
15.12.2022.

கேள்வி அறிவித்தல்

வெலிகந்த பிரதேச சபை - 2023ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு விடுதல்

வெலிகந்த பிரதேச சபைக்குரித்தான பின்வரும் ஆதனங்களை 2023ஆம் வருடத்தில் குத்தகைக்கு விடுவதற்காக இத்தால் கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன.

- ❖ கேள்விதாரர் பொலன்னறுவை மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும்
- ❖ கேள்விப்படிவ விநியோகம் - 2022-12-19ஆம் திகதி முதல் 2023-01-03ஆம் திகதி மு.ப. 10.00 வரை
- ❖ கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் - 2022-12-19ஆம் திகதி முதல் 2023-01-03ஆம் திகதி பி.ப. 2.00 வரை
- ❖ கேள்விப் படிவங்களைத் திறத்தல் - 2023-01-03ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு வெலிகந்த பிரதேச சபையில்

கேள்வி நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை வெலிகந்த பிரதேச சபை, வெலிகந்த, பொலன்னறுவை எனும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் மற்றும் 027-2259095 எனும் தொலைபேசி / தொலைநகல் இலக்கம், welikandaps@gmail.com எனும் மின்னஞ்சல் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை

01. வாரச் சந்தை (இரண்டாம் முறை)

தொ. இல.	வியாபார இடம்	கேள்விப் பிணைத் தொகை (ரூபா)	கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா)	குறைந்தபட்ச கேள்வி
01	கடுவன்வில வாரச்சந்தை	3,000.00	2,500.00	15,000.00

02. பொது மலசலகூடம் (இரண்டாம் முறை)

தொ. இல.	வியாபார இடம்	கேள்விப் பிணைத் தொகை (ரூபா)	கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா)	குறைந்தபட்ச கேள்வி
01	செவனபிட்டிய பொது மலசலகூடம்	5,000.00	2,500.00	33,400.00
02	வெலிகந்த வாரச் சந்தை பொது மலசலகூடம்	3,000.00	2,500.00	6,050.00
03	வெலிகந்த பொது மலசலகூடம்	20,000.00	2,500.00	126,830.00

03. சுற்றுலா பங்களா

தொ. இல.	வியாபார இடம்	கேள்விப் பிணைத் தொகை (ரூபா)	கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா)	குறைந்தபட்ச கேள்வி (ஒரு மாத்திற்கு)
01	வெலிகந்த சுற்றுலா பங்களா • 03 A/C அறைகள் மற்றும் இணைந்த குளியலறை சகிதம் அறை இலக்கம் ➢ 01 - 10x10 சதுர அடி ➢ 02 - 10x12 சதுர அடி ➢ 03 - 10x10 சதுர அடி	100,000.00	3,000.00	25,000.00

04. வெலிகந்த வாரச்சந்தைக் கட்டிடத்தின் மேல் மாடி கடை அறைகள்

தொ. இல.	கடை அறை இல.	சதுர அடி பரப்பளவு	கேள்விப் பிணைத் தொகை (ரூபா)	கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூபா	குறைந்தபட்ச கேள்வி (மாதாந்த கடை வாடகை) ரூபா
1	1	4.5 x 4.5	50,000.00	2,500.00	2,700.00
2	2	4.5 x 4.5	50,000.00	2,500.00	2,700.00
3	3	4.5 x 4.5	50,000.00	2,500.00	2,800.00
4	4	4.5 x 4.5	50,000.00	2,500.00	2,800.00
5	5	4.5 x 4.5	50,000.00	2,500.00	2,900.00
6	6	4.5 x 4.5	50,000.00	2,500.00	2,900.00
7	7	4.5 x 4.5	50,000.00	2,500.00	2,900.00
8	8	4.5 x 4.5	50,000.00	2,500.00	2,900.00
9	9	4.5 x 4.5	50,000.00	2,500.00	2,800.00
10	10	4.5 x 4.5	50,000.00	2,500.00	2,700.00
11	11	4.5 x 4.5	50,000.00	2,500.00	2,700.00

எம்.எச். நிமல் அதிகாரி,
தலைவர்,
பிரதேச சபை, வெலிகந்த.
2022-12-15ஆம் திகதி
வெலிகந்த பிரதேச சபை அலுவலகத்தில்.

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2022 டிசம்பர் 19 திங்கட்கிழமை

குரோசியாவுக்கு மூன்றாம் இடம்

மொரோக்கோ அணியை 21 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வீழ்த்திய குரோஷிய அணி உலகக் கிண்ண கால்பந்து தொடரில் மூன்றாவது இடத்தை உறுதி செய்தது.

கலீபா சர்வதேச அரங்கில் சனிக்கிழமை (17) நடைபெற்ற போட்டியின் ஆரம்பத்திலேயே இரு அணிகளும் பதிலுக்கு பதில் கோல் புகுத்த பரபரப்பு அதிகரித்தது. 7ஆவது நிமிடத்தில் குரோசியா கோல் புகுத்த இரண்டு நிமிடங்கள் கழித்து மொரோக்கோ பதில் கோல் திருப்பியது. இந்நிலையில் முதல் பாதி முடிவதற்கு மூன்று நிமிடங்கள் இருக்கும்போது மிஸ்லேவ் ஓர்சிக் மொரோக்கோ கோல் கம்பத்தில் பக்கவாட்டியாக இருந்து வளைவாக உதைத்த பந்து உயரச் சென்று கோலாக மாறியது.

இதன்மூலம் குரோசியா வெற்றியை உறுதி செய்தது.

குரோசிய அணி கடந்த உலகக் கிண்ணத்தில் இறுதிப் போட்டி வரை முன்னெறியதோடு முதல் முறை உலகக் கிண்ணத்தில் கலந்து கொண்டு 1998 ஆம் ஆண்டு தொடரிலும் மூன்றாம் இடத்தைப் பெற்றது.

டெஸ்ட் சம்பியன்சிப்:

இந்தியாவின் வெற்றியால் இலங்கைக்கு பின்னடைவு

பங்களாதேஷுக்கு எதிராக நேற்று (18) நிறைவடைந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 188 ஓட்டங்களால் வெற்றியீட்டியதை அடுத்து அந்த அணி ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்சிப் பட்டியலில் இரண்டாம் இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

மறுபுறம் பிரிஸ்பானில் நடந்த முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியாவிடம் தென்னாபிரிக்கா ஆறு விக்கெட்டுகளால் தோற்ற நிலையிலேயே இந்திய அணியால் மூன்றாவது இடத்தில் இருந்து இரண்டாவது இடத்திற்கு முன்னேற முடிந்துள்ளது.

இதன்படி இந்திய அணி டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப்பட்டியலில் மொத்தம் 55.77 புள்ளிகளுடன் இருக்கும் நிலையில் தென்னாபிரிக்கா (54.54) மற்றும் இலங்கை (53.33) அணிகள் முறையே மூன்று மற்றும் நான்காவது இடங்களுக்கு பின்தள்ளப்பட்டுள்ளன.

இதில் 76.97 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கும் அவுஸ்திரேலிய அணி உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியை கிட்டத்தட்ட உறுதி செய்துள்ளது. இந்நிலையில் இரண்டாவது இடத்திற்காக இந்தியாவுடன் தென்னாபிரிக்கா, இலங்கை அணிகளிடையே போட்டி நிலவுகிறது.

இதில் பங்களாதேஷுக்கு எதிராக மேலும் ஒரு டெஸ்ட் மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நான்கு டெஸ்ட்கள் என இந்திய அணிக்கு மேலும் ஐந்து டெஸ்ட் போட்டிகள் எஞ்சி இருப்பதோடு தென்னாபிரிக்காவுக்கு ஆஸியுடன் மேலும் இரு டெஸ்ட்கள் மற்றும் மேற்கிந்திய தீவுகளுடன் இரண்டு டெஸ்ட்கள் என மேலும் நான்கு டெஸ்ட் போட்டிகள் எஞ்சியுள்ளன.

இலங்கை அணிக்கு டெஸ்ட் நடப்புச் சம்பியனான நியுசிலாந்துடன் அதன் சொந்த மண்ணில் இரண்டு டெஸ்ட் போட்டிகள் எஞ்சியுள்ளன. இலங்கை மற்றும் நியுசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் வரும் மார்ச் மாரம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீடு மாறுகிறார் குணதிலக்க

அவுஸ்திரேலியாவில் பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை வீரர் தனுஷ்க குணதிலக்க தற்போது தங்கியுள்ள வீட்டில் இருந்து வெளியேறி ஒற்றை அறை கொண்ட தொடர்மாடி குடியிருப்பு ஒன்றுக்குச் செல்ல சிட்னி நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை குணதிலக்க (16) நீதிமன்றத்தில் ஆஜரான நிலையில் அவரது வழக்கறிஞர் இந்தக் கோரிக்கையை நீதிமன்றத்தின் முன் விடுத்துள்ளார்.

குணதிலக்கவுக்கு உதவ முன் வந்த ஒருவரின் வீட்டில் அவர் தங்கி இருப்பதாகவும் சட்ட செயற்பாடு மிக நீண்டதாக இருக்கும் நிலையில் புதிய வீட்டுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் கோரியுள்ளார். இந்தக் கோரிக்கையை பரிசீலித்த சிட்னி நீதிமன்றம் குணதிலக்கவுக்கு புதிய வீட்டுக்குச் செல்ல அனுமதி அளித்துள்ளது. இந்த வழக்கு வரும் ஜனவரி 12ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கண்டி அணி வெற்றி

நிப்போன் பெயின்ட் கிண்ணத்திற்கான முதற்தர கழகங்களுக்கிடையிலான ரக்பி சுற்றுப் போட்டியில் நடப்புச் சம்பியனான கண்டி விளையாட்டுக் கழகம், சி.ஆர் அன்ட் எப்.சி அணிக்கு எதிரான போட்டியில் 1113 என்ற புள்ளிகளால் வெற்றியிட்டியது.

கடந்த சனிக்கிழமை (17) லொங்டன் பிளேசில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதல் பாதியில் 30 என முன்னிலை பெற்ற நிலையில் கடும் போட்டிக்குப் பின்னர் வெற்றியை உறுதி செய்தது.

இதேவேளை சனிக்கிழமை நடந்த மற்றப் போட்டியில் விமானப்படை அணியை ஹவலொக் கழகம் 3635 என்ற புள்ளிகளால் தோற்கடித்தது.

இந்த முடிவுகளின்படி கண்டி அணி புள்ளிப் பட்டியலில் முதல் இரு போட்டிகளிலும் வெற்றியீட்டி முதலிடத்தில் உள்ளது.

இலங்கை குழாத்தில் நுவனிதுவுக்கு இடம்

இந்தியாவுக்கு எதிரான மூன்று டி20 மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளுக்கான இலங்கை குழாத்தில் அவிஷ்க பெர்னாண்டோ மற்றும் சதீர சமரவிக்ரமவுடன் சர்வதேச அனுபவம் அற்ற நுவனிது பெர்னாண்டோ அழைக்கப்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன, பிரமோத் மதுஷான், டில்ஷான் மதுஷங்க, நுவன் துஷார மற்றும் ஜெப்ரி வென்டர்சே ஆகியோரும் அணிக்கு திரும்பியுள்ளனர். பானுக்க ராஜபக்ஷ டி20 போட்டிகளுக்கு மாத்திரம் சேர்க்கப்பட்டிருப்பதோடு ஒருநாள் அணியில் இணைக்கப்படவில்லை என்று அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 தொடரில் நுவனிது பெர்னாண்டோ அழைக்கப்பட்டபோதும் அவர் இன்னும் தனது கன்னி சர்வதேச போட்டியில் ஆடவில்லை. இந்தியா சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி வரும் ஜனவரி 3ஆம் திகதி தொடக்கம் டி20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ளது.

பயங்கரவாதத்தை எதிர்க்க அழைப்பு

பொறுப்புக்கூறல் பயங்கரவாதத்திற்கு எதிரான அடிதடதளமாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய் சங்கர், அது உலக அமைதி மற்றும் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் அதற்கு எல்லைகள் மற்றும் தேசியங்கள் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார். ஐ.நா பாதுகாப்புச் சபையின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவத்தார். பயங்கரவாத சவாலுக்கு எதிராக சர்வதேச சமூகம் கூட்டாக ஒன்றிணைந்து போராடவும் அழைப்பு விடுத்தார்.

வட கொரியா மேலும் ஏவுகணை சோதனை

வட கொரியா இரு மத்திய தூர பளிஸ்டிக் ஏவுகணைகளை கொரிய தீபகற்பத்தின் கிழக்குக் கடற்கரைக்கு அப்பால் விசியதாக தென் கொரியா மற்றும் ஜப்பான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வட கொரியாவின் டொங்சங் ரி பகுதியில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (நேற்று) சுமார் 50 நிமிட இடைவெளியில் இரு ஏவுகணைகளும் ஏவப்பட்டதாக தென் கொரியாவின் கூட்டுப்படை தலைவர் குறிப்பிட்டுள்ளார். இந்த ஏவுகணைகள் 550 கி.மீற்றர் உயரத்திற்கு 250 கி.மீற்றர் தூரம் பாய்ந்ததாக ஜப்பான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. வட கொரியா அண்மைய மாதங்களில் கணிசமான எண்ணிக்கையிலான அணு ஆயுத திறன் படைத்த பிளாஸ்டிக் ஏவுகணைகளை சோதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச செய்திகள்

சீனாவில் தீவிரம் அடையும் கொவிட்

சீனாவின் வடக்கு மற்றும் தெற்கில் உள்ள பெரு நகரங்களில் கொவிட்–19 சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் பல நகரங்களும் வெறிசோடிக் காணப்படுகின்றன.

இந்த குளிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் மூன்று கொரோனா அலை தாக்கங்களில் முதல் அலையை எதிர்கொண்டிருப்பதாக தலைமை தொற்று நோயியல் நிபுணர் வு சுங்யு தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் உள்ள சந்திர புத்தாண்டு விடுமுறைக்காக மக்கள் வீடுகளுக்கு திரும்பும்போது நாடு முழுவதும் நோய் பரவல் பல மடங்கு அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

மக்கள் எதிர்ப்பை அடுத்து சீனா கொரோனா தொற்றை முழுமையாக துடைத்தொழிக்கும் கொள்கையில் தளர்வை கொண்டுவந்துள்ளது. இந்நிலையில் கடந்த சனிக்கிழமை (17) அங்கு 2097 புதிய தொற்றுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தலைநகர் பீஜிங்கில் தீவிரமாகப் பரவக்கூடிய ஒமிக்ரோன் திரிபு காரணமாக அங்கு பொதிச் சேவைகள், இறுதிச் சடங்கு மற்றும் தகன சேவைகள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளன.

சியான் நகர வீதிகள் வெறிச்சோடிக் காணப்படும் படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன. ஷங்காயில் பாடசாலைகள் மூடப்பட்டு ஒன்லைன் முறை கல்விக்கு திரும்பியுள்ளது. அருகிலுள்ள ஹங்சுவில் முன்கூட்டியே பாடசாலை தவணையை நிறைவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சீனா வரும் ஜனவரி 21ஆம் திகதி சந்திர புத்தாண்டை கொண்டாடவுள்ளது. இந்தக் காலத்தில் வழக்கமாக பல மில்லியன் மக்கள் தமது குடும்பத்தினருடன் விடுமுறையை கழிக்க விடுகளை நோக்கி பயணிக்கின்றனர். இந்நிலையில் சீனாவில் நோய்த் தொற்று தீவிரம் அடையும் நிலையில் 2023இல் அங்கு ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் உயிரிழக்கக் கூடும் என்று அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஆய்வு நிறுவனம் ஒன்று எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரபல ஈரான் நடிகை கைது

அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவு அளித்த ஈரானின் பிரபல நடிகை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொய்யான தகவலை பரப்பியதாக குற்றம்சாட்டியே டரானே அலிதூஸ்தி என்ற நடிகை கைது செய்யப்பட்டதாக ஈரானிய அரச ஊடகம் குறிப்பிட்டுள்ளது. கடந்த வாரம் அவர் இன்ஸ்டாகிராமில் வெளியிட்ட பதிவில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆடவர் ஒருவர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதை கண்டித்திருந்தார்.

அலிதூஸ்தி ஒஸ்கார் விருது வென்ற 'தி சேல்ஸ்மன்' என்ற திரைப்படத்தில் நடித்தவராவார்.

ஈரானில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நாட்டில் பதற்ற சூழலை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

52 அடி உயரமான: உலகின் மிகப் பெரிய மீன் தொட்டி வெடிப்பு

பெர்லின் நகரில் இருந்த உலகின் மிகப் பெரிய மீன் தொட்டி வெடித்துச் சிதறியதில் ஆயரத்துக்கும் அதிகமான மீன்கள் கொல்லப்பட்டதோடு இருவருக்குக் காயம் ஏற்பட்டது. அருகில் இருக்கும் வீதிகளில் நீர் வெள்ளம் போல் நிரம்பியது.

ராடிசன் கல்லக்ஷன் ஹோட்டலில் இருந்த இந்த மீன் தொட்டி 52 அடி உயரம் கொண்டதோடு 1500க்கும் அதிகமான அலங்கார மீன்கள் இருந்தன. ஜெர்மனி நேரப்படி கடந்த வெள்ளிக்கிழமை காலை இந்தத் தொட்டி எதிர்பாராத விதமாக வெடித்துச் சிதறியதில் ஹோட்டல் கட்டடமும் பெரும் சேதத்துக்கு உள்ளானது. நீர் தொட்டியில் நிரப்பப்பட்டிருந்த 10 இலட்சம் லீற்றர் தண்ணீர் கட்டடத்தில் இருந்து வெளியேறி வீதி முழுவதும் ஆறாக ஓடியது. அதிகாலையில் வெடித்துச் சிதறியதால் பெரும்பாலானவர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை. உடன் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதோடு கட்டடத்தில் உள்ள விடுதிகளில் இருந்த 300 விருந்தினர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர். 1,500 மீன்களில் எத்தனை மீன்கள் செத்தன, எத்தனை மீன்கள் காப்பாற்றப்பட்டன என தகவல்கள் வெளியாகவில்லை.

எனினும் பெரும்பாலான மீன்கள் இறந்துவிட்டதாக ஹோட்டல் ஊழியர் ஒருவர் கூறினார். ஹோட்டலுக்குள் வெப்பநிலை, மைனஸ் 6 டிகிரிக்கும் குறைவாக சென்றதால் மீன் தொட்டியின் கண்ணாடியில் விரிசல் ஏற்பட்டு வெடித்ததாக கூறப்படுகிறது.

பலஸ்தீனிய வழக்கறிஞர் இஸ்ரேலால் நாடுகடத்தல்

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என குறிப்பிட்டு பலஸ்தீன மற்றும் பிரான்ஸ் மனித உரிமை வழக்கறிஞர் ஒருவரை இஸ்ரேல் நாடு கடத்தியுள்ளது.

37 வயதான சலாஹ் ஹமூரி என்ற அந்த வழக்கறிஞர் நேற்றுக் காலை பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டு பிரான்ஸுக்கு விமானம் ஏற்றப்பட்டுள்ளார்.

அவர் ஜெரூசலத்தில் வாழ்ந்தவராவார். பயங்கரவாத அமைப்பு ஒன்றில் அங்கம் வகிப்பதாக குற்றம்சாட்டப்பட்டு அவர் குடியிருக்கும் உரிமையும் நீக்கப்பட்டுள்ளது.

தன் மீதான குற்றச்சாட்டுகளை ஹமூரி நிராகரிப்பதோடு, இதனை உரிமைக் குழுக்கள் கண்டித்துள்ளன.

எனினும் இஸ்ரேலியர்கள் மீது பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்த ஹமூரி திட்டமிட்டதாக இஸ்ரேலிய உள்துறை அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஹமூரி தனது தாய் வழியால் பிரான்ஸ் குடியுரிமையை பெற்றவராவார். ஜெரூசலத்தில் குடியிருக்கும் உரிமையை அவர் வைத்திருந்தார். எனினும் இந்த உரிமையை இஸ்ரேலிய நிர்வாகத்தால் அகற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 19ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.